# உட்காரு – நட - நில்




வாட்ச்மேன் நீ

# முகவுரை

பவுல் அப்போஸ்தலனுடைய அநேக நிருபங்கள், போதனைகள் சத்தியங்கள், நடைமுறைக்கான அனுபவ ஆலோசனைகள் ஆகிய இரு பகுதிகளாகப் பிரித்திருப்பதுபோலவே, எபேசியருக்கு எழுதின நிருபமும் அமைந்திருக்கிறது. போதனைகள் - உபதேசக் கொள்ளைகள் அடங்கிய முதல் பாகம் (முதல் மூன்று அதிகாரங்கள்) தேவன் கிறிஸ்துவின் மூலம் நமக்கென்று உண்டுபண்ணின மீட்பின் மூல சத்தியங்களையே பெரும்பாலும் கொண்டிருக்கிறது. அன்றாட நடைமுறைக்கேற்ற ஆலோசனைகளாக அமைந்துள்ள அடுத்த பாகமானது (கடைசி மூன்று அதிகாரங்கள்) நாம் பெற்ற அந்த மீட்பினிமித்தம், தேவன் நம்மிடத்திலிருந்து எதிர்நோக்குகிற கிறிஸ்த நடத்தை, வைராக்கியம் ஆகியவற்றை விவரிக்கிறது. இந்த இரண்டு பகுதிகளும் நெருங்கிய சம்பந்தமுடையவைகள். ஆயினும் அவைகளின் நோக்கத்திலே வித்தியாசமுண்டென்பதை தெளிவாகக் காணலாம்.

பின்னும் அனுபவத்திற்கேற்ற ஆலோசனைகளாக அமைந்துள்ள பிந்திய பாகத்தை, அவைகளில் பொருளுக்கேற்றபடி அனுகூலமான இரு சிறிய பகுதிகளாகப் பிரிக்க முடியும். இதில் சற்று விரிவாக உள்ள முதல் பகுதி (4:1-6,9). இவ்வுலகத்தில் இரண்டாம் பகுதி (6:10-6:24) சாத்தானுடன் நமக்குள்ள போராட்டத்தைப்பற்றியும் சொல்லுகிறது.

இவ்விதமாக எபேசியர் நிருபம் கிறிஸ்துவுக்குள் விசுவாசியின் நிலை (1:1 - 3:21), இவ்வுலகத்தில் அவன் ஜீவியம் (4:1 - 6:9), விரோதியான சாத்தானுக்கு அவன் காட்ட வேண்டிய பாங்கு (6:10 - 6:24) ஆகிய மூன்று பகுதிகளாகப் பிரிந்திருக்கிற. கீழ்க்காணும் விதமாக நாம் இதைப் பிரித்துக் காண்பிக்கக்கூடும்.

எபேசியர் நிருபம்

முதல் பகுதி: போதனைகள்
(அதிகாரம் 1 முதல் 3 முடிய)
(1) கிறிஸ்துவில் நம் நிலை (1:1-3:21)

இரண்டாம் பகுதி: அனுபவ ஆலோசனைகள்
(அதிகாரம் 4 முதல் 6 முடிய)
(1) இவ்வுலகிலுள்ள நமது ஜீவியம் (4:1-5:9).
(2) விரோதியானவனுடன் நமக்குள்ள நடத்தை (5:10-6:24).

பவுலின் நிருபங்கள் யாவற்றைக்காட்டிலும் எபேசியர் நிருபத்தில்தான் கிறிஸ்த ஜீவியத்திற்கடுத்த ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களைப் பார்க்கிறோம், ஆவிக்குரிய ஐசுவரியங்களினாலே இந்த நிருபம் நிரப்பப்பட்டிருந்தாலும், அவைகள் முற்றும் அனுபவ சாத்தியமானவைகளே. இந் நிருபத்தில் முதல் பகுதி, பரலோகத்தின் உன்னதங்களிலே கிறிஸ்துவுடன்கூட ஐக்கியப்பட்டுள்ள நம்முடைய ஜீவியத்தை வெளிப்படுத்துகிறது. பிந்தின பாகம், அவ்வகை பரலோக ஜீவியத்தை இப்பூலோகத்திலேயும் ஜீவிப்பது எவ்வாறு என்று அனுபவரீதியாகக் காண்பிக்கிறது. இந்த நிருபத்தை விரிவாகப் படிப்பது என்பது எமது கருத்து அல்ல. இந்நிருபத்தில் ஆதாரமாக அமைந்துள்ள சில முக்கிய கருத்துக்களை அறிந்து கொள்ள வேண்டுமென்பதே எமது எண்ணம். இந்தப் படிப்பினை எதுவாக மேற்கூறிய பகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து, மூலக் கருத்தை வெளிப்படுத்துமென்று எண்ணுகிற ஒவ்வொரு வார்த்தையைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுவோம்.

நிருபத்தின் முதல் பகுதியில் அப்பகுதிக்கு திறவுகோல்போல் அமைந்ததும், உண்மையான கிறிஸ்தவ அனுபவத்தின் இரகசியமுமான வார்த்தை உட்காரு (2:7) என்பதே. தேவன் நம்மை கிறிஸ்துவுடன்கூட உன்னதங்களில் உட்காரும்படி செய்திருக்கிறார். கிறிஸ்துவுடன் வீற்றிருத்தலாகிய இளைப்பாறுதல் என்ற இடத்திலிருந்தே ஒவ்வொரு கிறிஸ்தவனும் தன் ஆவிக்குரிய ஜீவியத்தை ஆரம்பிக்கவேண்டும். அடுத்தபடியாக இரண்டாம் பகுதியின் மூலக் கருத்தாக அமைந்த நட (4:1) என்ற பதத்தை தெரிந்துகொள்வோம். நட என்ற இந்தச் சொல்லே, இவ்வுலகத்திலுள்ள நமது ஜீவிய ஓட்டத்தை வெளிப்படுத்துகிறது. இதிலே நாம், நம்முடைய உன்னத அழைப்பின் தகுதிகேற்ற கிறிஸ்தவ நடத்தையை வெளிப்படுத்தும்படியான சவாலைப் பெறுகிறோம். கடைசியாக மூன்றாம் பகுதியில் சத்துருவாகிய சாத்தானிடம் நாம் நடந்துகொள்ளவேண்டிய முறையை வெளிப்படுத்துகிற நில் (6:11) என்ற பதத்தைத் தெரிந்துகொள்ளலாம். இப்பதமே இறுதியில் நமக்குள்ள வெற்றியின் ஸ்தானத்தைக் குறிக்கிறது. இவ்விதமாக நாம் காண்கிறதாவது:

(1) கிறிஸ்துவில் நம்முடைய நிலை - உட்காரு (2:7)
(2) உலகத்தில் நம்முடைய ஜீவியம் - நட (4:1)
(3) விரோதிக்கு நாம் காட்டவேண்டிய நிலை - நில் (6:11)

ஆதலால் உட்காரு, நட, நில் என்ற இந்த மூன்று பதங்களையும், இந்நிருபத்தில் அடங்கிய போதனைகளுக்கு ஆதாரமாக நாம் எடுத்துக்கொள்வோம். இவ்வார்த்தைகள் வரும் கிரமத்தையும் அவைகளுக்குள்ள சம்பந்தத்தையும் ஊன்றி கவனிப்பது நமக்கு மிகுந்த பலனை விளைவிக்கும்.

கிறிஸ்துவில் நம்முடைய நிலை - உட்காரு
உலகத்தில் நம்முடைய ஜீவியம் - நட
சாத்தானுக்கு நாம் காட்ட வேண்டிய நிலை - நில்

## உட்காரு

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவன்............... கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி............... எல்லா துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும் வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர் பெற்றிருக்கும் எல்லா நமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக, அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்தார் (1:17-21).

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலே உண்டானதல்ல (2:7-9).

தேவன்...... அவரை உன்னதங்களில்.......... உட்காரும்படி செய்தார். நம்மை உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். முதலாவதாக உட்காரு என்ற இந்தப் பதம் வெளிப்படுத்தும் உட்கருத்துக்களை நாம் பார்ப்போம். நான் முன்னே கூறினதுபோல அது பரலோக ஜீவியத்திற்கடுத்த இரகசியங்களை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்தவ ஜீவியம் நடப்பதில் துவங்குகிறதில்லை. அது உட்காருதலிலேயே ஆரம்பிக்கிறது. உன்னதங்களிலே கிறிஸ்துவானவர் உட்கார்ந்தபொழுதே கிறிஸ்தவ யுகம் ஆரம்பமானது. விசுவாசத்தின் மூலமாக நாம் கிறிஸ்துவுடன்கூட உட்கார்ந்திருக்கிறதைக் காணும்பொழுதே தனிப்பட்டவிதமாய் நமது கிறிஸ்தவ ஜீவியமும் ஆரம்பிக்கிறது. கிறிஸ்தவர்களில் அநேகர் உட்காருகிறேன் என்று சொல்லி நடக்கமுயலுகிற தப்பிதத்தைச் செய்கிறார்கள். இது மெய்யான ஒழுங்கிற்கு மாறானதே. நாம் நடந்து முன்னேறாவிட்டால் இலக்கைக் கண்டடையும் வகைதான் எது என்று நமது மனித அறிவு கேட்கிறது. முயற்சியில்லாமல் நாம் எதைப் பெற்றக்கொள்ளமுடியும்? நாம் அசையாமலிருந்தால் ஓர் இடத்தை எப்பொழுதேனும் போய்ச் சேர முடியுமா? ஆனால் கிறிஸ்தவ போதனையோ மனித போக்குக்கு வேறுபட்டது. துவக்கத்திலேயே நாம் எதையாவது செய்ய முயலுவோமானால், அதனால் நாம் பெறுவது ஒன்றுமிராது. கொஞ்சகாலத்தை அடையவேண்டுமென்று பிரயாசப்பட்டோமாகில், எல்லாவற்றையும்

இழந்துபோவோம். ஏனெனில் செய் என்பதில் கிறிஸ்தவ அனுபவம் துவங்காமல், செய்தாயிற்று என்பதிலேயே அது ஆரம்பிக்கிறது. ஆகையினாலேயே, தேவன் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே, ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்து இருக்கிறார் (1:3) என்ற சத்தியத்துடன் எபேசியா நிருபம் துவங்குகிறது. முயற்சியில் இறங்கி, நமக்கானதைப் பெற்றுக்கொள்ளுவோம் என்பதாயிராமல் தேவன் நமக்காக செய்து முடித்திருக்கிறவைகளை அனுபவிக்கும்படிக்கு, எடுத்த எடுப்பிலேயே உட்காரும்படியாக நாம் அழைக்கப்படுகிறோம்.

நடப்பது ஒரு முயற்சியைக் குறிக்கிறது. ஆனால், நாம், கிரியைகளினாலல்ல, கிருபையினாலேதான் விசுவாசத்தைக் கொண்டு (2:8) இரட்சிக்கப்பட்டோம் என்று தேவன் கூறுகிறார். விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம் என்னும் சொற்றொடரை நாம் அடிக்கடி உபயோகிக்கிறோம். இதனால் நாம் கொள்ளும் அர்த்தம் என்ன? ஆண்டவராகிய இயேசுவின்மேல் பொறுப்பைச் சுமத்திவிட்டு இளைப்பாறுகிறதினாலேயே நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்பதே. நாம் நம்மை இரட்சித்துக் கொள்வதற்காக நாம் செய்துகொண்டது ஒன்றுமே இல்லை. பாவநோய் கொண்ட நம்முடைய ஆத்துமத்தின் பாரத்தை அவர்மேல் வைத்துவிட்டோம். நம்முடைய செய்கைகளின்மேல் நம்பிக்கை வைக்காமல், அவர் செய்தவைகளின் மேலேயே சார்ந்து, நம்முடைய கிறிஸ்தவ ஜீவியத்தை ஆரம்பித்தோமே. கிறிஸ்தவ ஜீவியம், துவக்க முதல் முடிவுவரை முற்றுமாய் ஆண்டவராகிய இயேசுவின்மேல் சார்ந்திருத்தலையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. நம்மேல் தேவன் பொழிய இருக்கும் கிருபையின் பெருக்கத்துக்கு எல்லையே இல்லை. எல்லாவற்றையும் நமக்குக் கொடுக்க அவர் சித்தமாயிருக்கிறார். ஆனால் நாம் அவரில் தரித்திருத்தாலன்றி, இவைகளிலொன்றையும் பெறப்போவதில்லை. இது நமது அறிவுக்கு ஒவ்வாததாகக் காணப்படினும் உட்காரக் கற்றுக் கொள்வதினாலன்றி கிறிஸ்த ஜீவியத்தில் நாம் முன்னேற்றம் காணமுடியாது என்பது உண்மையே.

உட்காருதல் என்பதின் உண்மையான கருத்துதான் என்ன? நாம் நிற்கும்போதும் நடக்கும்போதும் நமது கால்களே சரீரத்தின் பாரத்தை தாங்குகிறது. உட்காரும் பொழுதோ, நமது சரீரத்தின் முழுப்பாரத்தையும் நாம் உட்காரும் நாற்காலியோ அல்லது ஆசனமோ தாங்குகிறது. நாம் நிற்கையிலும் நடக்கையிலும் களைப்படைகிறோம். ஆனால் சிறிதுநேரம் உட்காரும்பொழுதோ, ஓய்வுபெறுகிறோம். ஏனெனில், நம்முடைய முழுப் பாரமும் நம் தசைநார்களின்மேலும் நரம்புகளின்மேலும் விழாமல், நமக்கு வெளியேயுள்ள வேறொன்றின்மேல் விழுவதே காரணம். இவ்வாறே ஆவிக்குரிய காரியங்களிலும் உட்காருதல் என்பது ஆண்டவர்மேல் நம்முடைய முழு பாரத்தையும்

சுமத்துவதேயாகும். அது எல்லாப் பொறுப்புகளையும் நாம் சுமப்பதை விட்டு ஓய்ந்து, அவரையே சுமக்க விடுதலாகும்.

ஆதிமுதற்கொண்டு தேவனுடைய சட்டம் இதுவே. சிருஷ்டிப்பிலே தேவன் முதல் நாளிலிருந்து, ஆறாம் நாள்வரை வேலைசெய்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஏழாம் நாள் தேவனின் ஓய்வுநாள். அது தேவனுக்கு ஓய்வுநாள். ஆனால், ஆதாமின் காரியமென்ன? தேவனின் ஒய்வுக்கடுத்த விஷயத்தில் அவன் நிலை என்ன? ஆதாம் ஆறாம் நாளில் சிருஷ்டிக்கப்பட்டான் என்று எழுதியிருக்கிறது. ஆகையினால் தேவனுடைய ஏழாம் நாள் ஆதாமுக்கு முதல் நாளாகிறது. தேவன் ஆறுநாளும் வேலைசெய்து, பின் ஏழாம் நாளில் ஓய்வை அனுபவிக்க , ஆதாம் தன்னுடைய ஜீவியத்தை ஓய்வுநாளில் துவக்கினான். தேவனுடைய கிரியை முடிவுபெற்றபடியினாலேயே ஆதாம் தன் ஜீவியத்தை ஓய்விலே ஆரம்பிக்கமுடிந்தது. இதுவே சுவிசேஷம். இரட்சிப்பின் கிரியையைத் தேவன் பூர்த்தியாக்கிவிட்டார். அதை நாம் பெறும்படியாக எதையும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அவர் செய்துமுடித்த கிரியையைப் பூரணமாய் அனுபவிக்கும்படி நாம் உடனே பிரவேசிக்கக்கூடும்.

சிருஷ்டிப்பிலே தேவன் கொண்ட ஓய்வுக்கும், மீட்பின் கிரியைக்குப்பின் தேவன் கொண்ட ஒய்வுக்கும் இடையே எவ்வளவோ நடைபெற்றது என்று நாம் அறிவோம். ஆதாம் செய்த பாவம், அவன் பெற்ற தண்டனை, மோட்சமடையும்படி மனுமக்களின் முடிவுபெறாத பிரயோஜனமற்ற பிரயாசம், இழந்துபோனதை இரட்சிக்குமளவு தேவகுமாரன் பட்டபாடுகள் ஆகிய இவைகள் எல்லாம் இடையில் நடந்தன. மனிதரின் மீட்புக்காக அவர் உழைக்கும்போது, என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்தவராகிறார். நானும் கிரியை செய்து வருகிறேன் என்று அவர் சொன்ன வார்த்தைகள் கடைசியில் மீட்பின் கிரியை பூர்த்தியானவுடனே முடிந்தது என்ற ஜெயதொனியாக மாறினதே.

வெற்றியுள்ள இந்த அறைகூவலே மேற்கண்ட ஒப்பனை உண்மையென்று விளக்குகிறது. தேவன் கிறிஸ்துவில் எல்லாவற்றையும் செய்து முடித்தார் என்பதும், நாம் அதை அனுபவிக்கும்படி விசுவாசத்தின்மூலமாய்ப் பிரவேசிக்கிறோம் என்பதுமே கிறிஸ்தவத்தின் உண்மையான அர்த்தம். ஆகையால் இச்சந்தர்ப்பத்திற்கேற்றபடி, நாம் பிரதானமாகக் கொண்ட வார்த்தை உட்காரு என்ற கட்டளையாயிராமல், கிறிஸ்துவில் வீற்றிருக்கிறவர்கள் ஆக நம்மைக் காணுதலே ஆகும். தேவன் தமது பலத்த சத்துவத்தின்படியே, கிறிஸ்துவை உட்காரும்படி செய்தார் என்றதும் கிருபையினாலே நம்மை அவரோடே உட்காரவும் செய்தார் என்றதுமான இந்த இரண்டு சத்தியங்களில் அடங்கியுள்ள எல்லாவற்றையும் அறியும்படிக்கு நமக்குப் பிரகாசமான மனக்கண்களைத் தந்தருளவேண்டுமென்று பவுல் வேண்டிக்கொள்கிறார் (1:19).

இந்தக் கிரியை நம் மூலமாயுண்டாயிராமல், அவருடையதாகவே இருக்கிறதென்பதே, நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முதல் பாடம். கிரியா பிரமாணத்திலல்ல, தேவனே எல்லாவற்றையும் நமக்காகச் செய்து முடித்தார் என்பதை நாம் கண்டறிகிறதினாலேயே நாம் கிறிஸ்தவ ஜீவியத்தை துவக்குகிறோம்.

நம்முடைய கிரியையின் பிரமாணத்தினாலல்ல, வேறொருவர் செய்து முடித்த பூர்த்தியான வேலையிலிருந்தே கிறிஸ்தவ அனுபவம் ஆரம்பிக்கிறதுபோலவே, கிறிஸ்தவ ஜீவியமும் இந்தத் தத்துவத்தை ஒட்டியே தொடரவேண்டியதாகவும் இருக்கிறது. தேவன் செய்து முடித்ததை நாம் விசுவாசத்தினால் பற்றிக்கொள்வதினாலேயே ஆவிக்குரிய ஒவ்வொரு புதிய அனுபவமும் ஆரம்பிக்கிறது. ஆரம்ப முதல் முடிவு பரியந்தம் கிறிஸ்தவ ஜீவியத்தின் ஒவ்வொரு படியும் இந்தச் சத்தியத்திலிருந்தே பிறக்கிறது.

ஊழியத்திற்காக ஆவியின் வல்லமையை நான் எவ்விதமாய்ப் பெற்றுக்கொள்ள முடியும்? அதற்காக நான் உழைக்கவேண்டுமா? தேவனோடு அதற்காக போராடவேண்டுமா? உபவாசங்களினாலும் சுய வெறுப்புகளினாலும், என் ஆத்துமாவை வருத்தி, தகுதியுள்ளவனாக என்னைக் காண்பிக்க வேண்டுமா? வேண்டியதே இல்லை. வேதாகமத்தின் போதனை அப்படியல்ல. மறுபடியும் சிந்தித்துப் பாருங்கள். பாவமன்னிப்பை நாம் எவ்வண்ணமாகப் பெற்றோம்? அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியேயும் பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் படியுமே என்று எபேசியர் 1:5-7 ல் எழுதியிருக்கிறது. பாவமன்னிப்புக்காக நம்மைத் தகுதியாக்கிக் கொள்ளும்படி நாம் செய்தது ஒன்றுமில்லை. நம்முடைய மீட்பைக் கிறிஸ்துவுக்குள் அவருடைய இரத்தத்தின்மூலமாய் பெற்றோம். அவர் செய்து முடித்தவைகளின் காரணமாய் நாம் அதைப் பெற்றோம். இதுவே நம்முடைய இரட்சிப்பின் சுவிசேஷம் (1:13).

அப்படியானால் பரிசுத்த ஆவி பொழிந்தருளப்படுவதற்கான வேத ஆதாரம் என்ன? அது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உயர்த்தப்படுவதினாலேயாம். ஆண்டவராகிய இயேசு எனக்காக சிலுவையில் மரித்தபடியினாலே நான் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறேன். அவரே சிங்காசன மட்டும் உயர்த்தப்பட்டபடியினாலே ஆவியின் வல்லமையைப் பெற்றுக்கொள்கிறேன் (அப்.2:33 பார்க்கவும்). ஆண்டவராகிய இயேசு மகிமைப்பட்டதின் காரணமாய் பரிசுத்த ஆவி அருளப்பட்டபடியினாலே, இந்த ஈவு என்னுடைய எந்தத் தகுதியையும், கிரியையும் சார்ந்ததல்ல. ஏதோ ஒன்றைச் செய்கிறதினால், பரிசுத்த ஆவியைப் பெறுகிறதில்லை. நான் நடப்பதினால் அல்ல, உட்காருகிறதினாலேயே எல்லாவற்றையும் பெற்றுக்கொள்கிறேன். அதாவது, ஆண்டவரில் தரித்திருக்கிறதினாலேயே பெற்றுக்கொள்கிறேன். இரட்சிப்பின்

முதல் அனுபவத்திற்குக் காத்திருத்தல் எவ்விதம் தேவையற்றதோ அவ்விதமே பரிசுத்த ஆவியின் பொழிவுக்கும் காத்திருத்தல் அவசியமற்றதாகிறது. இந்த ஈவுக்காக நீங்கள் தேவனிடத்தில் மன்றாடவோ, வேதனைப்படவோ, காத்திருப்புக் கூட்டங்கள் வைக்கவோ வேண்டிய தேவை இல்லை என்று நான் உங்களுக்கு உறுதிகூறுகிறேன். உன்னுடைய பிரயாசங்களினாலும், கிரியைகளினாலுமல்ல, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மகிமைக்குள்ளானதினிமித்தமே நீ பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்கிறாய். நீங்கள் விசுவாசிகளானபோது வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள் (1:13). இதுவும் இரட்சிப்பின் சுவிசேஷத்தில் அடங்கினதே.

பாவமன்னிப்பைக் குறித்தும், பரிசுத்த ஆவியின் ஈவைக் குறித்தும் நாம் கூறினவைகள் உண்மையானால், முற்றும் பரிசுத்தமாகுதலைக் குறித்த காரியம் என்ன? பாவத்தின் வல்லமையினின்று நாம் விடுதலையாகுதலை அறிவதெப்படி? நமது பழைய மனிதன் அறையப்பட்டவிதம் எப்படி? இதன் இரகசியமும் நடப்பதில் அல்ல, உட்காருதலிலேயே உள்ளது. ஏதோ ஒரு காரியத்தைச் செய்கிறதிலல்ல, முடிவு பெற்ற ஒன்றில் தரித்திருத்தலிலேயே உள்ளது. பாவத்திற்கு மரித்த நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம். கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். தேவன் நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் (ரோ.6:2-4, எபேசி.2:5). இந்த வினைச் சொற்களெல்லாம் இறந்த காலத்தில் உள்ளன. அது ஏன்? ஏனெனில், ஆண்டவராகிய இயேசு, சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எருசலேமுக்குப் புறம்பே சிலுவையிலறையப்பட்டார். அவருடனேகூட நானும் சிலுவையிலறையப்பட்டேன். இது சரித்திரபூர்வமான ஒரு நிகழ்ச்சி. இதனாலேயே அவருடைய அனுபவங்கள் என் ஆவிக்குரிய சரித்திரமாகிறது. அவருக்குள் நான் எல்லாவற்றையும் உடையவனாக தேவன் என்னைக் குறித்துப் பேசக்கூடும். நான் இப்பொழுது பெற்றிருக்கிறவைகளெல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் பெற்றேன். வேதவாக்கியங்கள் இவைகளுக்கடுத்த காரியங்களை நிகழ்காலத்தில ஆசீக்கத்தக்கவைகளாகவோ, அல்லது வருங்காலத்தில் பெறக்கூடியவைகளாகவோ பேசவில்லை. விசுவாசிக்கிற நாம் அனைவரும் பெற்று அனுபவிக்கிற கிறிஸ்துவுக்குரிய சரித்திரபூர்வமான உண்மைகளே இவைகள்.

நான் கிறிஸ்துவுக்குள் அறையப்பட்டேன், உயிர்ப்பிக்கப்பட்டேன், எழுப்பப்பட்டேன், உன்னதங்களில் உட்கார (இருத்தி) வைக்கப்பட்டேன். யோவான் 3:3ல் உள்ள இயேசுவின் வார்த்தைகள் எவ்வளவு புதிருள்ளவைகளாக விளங்குகின்றனவோ, அவ்வாறே மனுஷீக அறிவுக்கு இச் சத்தியங்களும் விளங்குகின்றன. அதுவோ, மறுபடியும் பிறப்பது எப்படி என்பதைப்பற்றிய காரியம். இதுவோ, அதைவிட அதிகமாக நம்பக்கூடாததாய்க்

காணப்படுகிறது. இது மறுபிறப்பைப்போல நமக்குள்ளாக நடைபெறவேண்டிய ஒரு காரியமாக மட்டுமல்லாமல், அநேக நாட்களுக்கு முன்னே மற்றவர் ஒருவருக்குள்ளாக நடந்து நிறைவேற்றப்பட்ட காரியமானதால், நாம் கண்டதும் ஏற்றுக்கொண்டதுமான அனுபவமாக நம்மில் விளங்கவேண்டியதாகவும் இருக்கிறது. இது எப்படி ஆகும்? இதை விளக்கிக்காட்ட இயலாது. தேவன் செய்து முடித்த ஒரு காரியமாக நாம் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளவேண்டியதே. கிறிஸ்துவுடனேகூட நாம் சிலுவையில் அறையப்பட்டோம் (கலா.2:20). அவரோடு நமக்குள்ள ஐக்கியம் அவருடைய மரணத்தில்தானே ஆரம்பமாகிறது. நம்மை மரணத்தில் அவரோடேகூட இணைத்தார். நாம் அவரில் இருந்தபடியினாலே அவருக்குள் இருக்கிறவர்களாகிறோம்.

ஆனால் கிறிஸ்துவில் இருக்கிறேன் என்ற உறுதியை நான் எப்படி பெற்றுக்கொள்ளுகிறது? அவரில் என்னை வைத்தது தேவனே என்று வேதம் உறுதி கூறுகிறபடியால் நான் நிச்சயமாய் நம்பக்கூடும். நீங்கள் அவராலே (தேவனாலே) கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள் (1.கொரி.1:30). உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி அபிஷேகம்பண்ணினவர் தேவனே (2.கொரி.1:21). இது தேவன் தமது சர்வ ஞானத்தினாலே நடப்பித்து, நிறைவேற்றினதும், நாம் கண்டு, விசுவாசித்துச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளவேண்டியதுமான ஒரு காரியமே.

நான் ரூபாய் நோட்டு ஒன்றை ஒரு புத்தகத்திற்குள் வைக்கிறேன். பின்பு அந்தப் புத்தகத்திற்கு நேரிடுகிறவைகளெல்லாம், அதனுள்ள இருக்கும் ரூபாய் நோட்டுக்கும் நேரிடுமல்லவா? புத்தகத்தை நான் எங்கெல்லாம் எடுத்துச்செல்கிறேனோ, அங்கெல்லாம் ரூபாய் நோட்டும் வரும். இவைகளுக்கு நடக்கும் சம்பவங்கள் யாவும் ஒன்றே. தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் வைத்ததும் இதைப்போன்றதே. ஆகையால் அவருக்கு நேரிட்டவை எவைகளோ, அவைகளே நமக்கும் நேரிட்டன. அவர் அடைந்த அனுபவங்கள் யாவற்றையும், அவருக்குள் நாமும் அடைந்தாயிற்று. நாம் இனிப் பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோ.6:6). இது சரித்திரம். நாம் பிறக்கும்முன்னதாகவே நம்முடைய சரித்திரம் எழுதியாகிவிட்டது. இதை நீ விசுவாசிக்கிறாயா? ஆம்! இது உண்மையே. நாம் கிறிஸ்துவுடனேகூட அறையப்பட்டது ஒரு மகிமையான சரித்திர உண்மை. பாவ சுபாவத்திற்கு அடிமைகளாயிராமல் விடுதலையடைவதென்பது, நாம் செய்யக்கூடிய ஒரு காரியத்தையல்ல, தேவன் நமக்காக முன்னதாகவே கிறிஸ்துவில் செய்து முடித்ததையே பொறுத்திருக்கிறது. இந்த சத்தியம் நமக்கு வெளிச்சமாகி, நாம் நம்மை அதிலே

சார்ந்திருக்கும்படி செய்வோமாகில் (ரோ.6:11) பரிசுத்த ஜீவியத்திற்கடுத்த இரகசியத்தை நாம் தெரிந்து கொண்டவர்களாவோம்.

ஆனாலும் அனுபவலாயிலாக இதைக் குறித்து மிகக் குறைவாகவே நாம் அறிந்திருக்கிறோம் என்பது உண்மையே. ஓர் உதாரணம் எடுத்துக்கொள்ளுவோம். உங்கள் முன்னிலையில் ஒருவன் உங்களைக் குறித்துத் தீமையாக பேசினால், அதை நீங்கள் எப்படி எடுத்துக்கொள்வீர்கள்? உங்கள் உதடுகளைப் பிதுக்கி பற்களைக் கடித்து, விழுங்கக்கூடாமல் விழுங்கி, மிகுந்த பிரயாசத்தைக் கையாளுவீர்கள். இப்படிப்பட்ட முயற்சிகளினாலே உங்கள் உணர்ச்சிகள் வெளியாகதபடி அடக்குவதிலும் தீதாகப் பேசினவருக்குமுன் மரியாதையாக நடந்துகொள்ளுவதிலும் சித்திபெறுவீர்களாகில், நீங்கள் பெரிய வெற்றியைக் கண்டுவிட்டதாக எண்ணுகிறீர்கள். ஆயினும் உள்ளக்கொதிப்பு இருதயத்தில் இல்லாமலில்லை. அது வெளிக்கு மூடப்பட்டிருந்தது. சில சமயங்களில் இவ்வாறாக மூடி வைப்பதிலும் வெற்றி பெறுகிறதில்லை. ஏன்? காரியம் என்னவெனில் நீ உட்காரும் முன்னதாக நடக்க முயல்கிறாய். அது தோல்விக்கு நிச்சயமான வழி. நான் இதை திரும்பவும் சொல்லுகிறேன். கிறிஸ்தவ அனுபவங்கள் ஒன்றும் நடப்பதில் ஆரம்பிக்கிறதில்லை. உட்கார்ந்து அமருகிறதினாலேயே அவை எப்பொழுதும் துவங்குகின்றன. எவையேனும் செய்தாகவேண்டும் என்பதிலல்ல. தேவன் செய்து முடித்தவைகளில் தரித்திருப்பதிலேயே, பாவ சுபாவங்களிலிருந்து விடுதலையாவதின் இரகசியம் உள்ளது.

மேற்கு தேசத்தின் பெரிய பட்டணம் ஒன்றில் வசித்து வந்த ஒரு பொறியில் இயக்குனர் உத்தியோகக் காரணமாய்க் கீழ் நாடுகளுக்குச் செல்லவேண்டியிருந்தது. அவர் பிரிந்திருந்த இரண்டு மூன்று ஆண்டுகளில், அவருடைய மனைவி உண்மையற்றவளாகி அவர் சிநேகிதர் ஒருவருடன் ஓடிவிட்டாள். அவர் தன் தாய் நாட்டுக்குத் திரும்பியபோது மனைவி மக்களின் உறவையும் தன் நெருங்கிய நண்பனுடைய சிநேகத்தையும் இழந்ததைக் கண்டார். நான் நடத்திக் கொண்டிருந்த ஒரு கூட்டம் முடிந்தபிறகு, துயரமிகுந்த இந்த மனிதர் தன் இருயத்தை என்னிடம் திறந்து இரண்டு ஆண்டுகளாக இரவும் பகலும் என் உள்ளம் பகையினால் நிறைந்திருக்கிறது என்று கூறினார். நான் ஒரு கிறிஸ்தவன். என் மனைவியையும் என் சிநேகிதனையும் மன்னிக்கவேண்டுமென்று எனக்குத் தெரியும். பலமுறை நான் முயன்றும் இது என்னால் இயலாததாக இருக்கிறது. தினந்தோறும் அவர்களை நேசிக்கும்படி தீர்மானிக்கிறேன். ஆனால் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதென்பதோ முடிகிறதில்லை. இதைக் குறித்து நான் என்ன செய்யக்கூடும்? என்று கேட்டார். நீர் ஒன்றுமே செய்யவேண்டியதில்லை என்று நான் பதிலளித்தேன். மிகவும் மலைத்தவராக, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? நான் அவர்களைத் தொடர்ந்து

பகைக்கவேண்டுமா? என்று கேட்டார். நான் விவரமாக, கர்த்தராகிய இயேசு சிலுவையில் மரித்தபொழுது, உம்முடைய பாவங்களை மாத்திரமல்ல உம்மையுங்கூட சுமந்து தீர்த்தார் என்ற சத்தியத்தில் உங்களுடைய பிரச்சனைக்குப் பதில் இருக்கிறது. தேவன் தம்முடைய குமாரனைச் சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். உங்களுடைய பழைய மனிதனையும் அவரோடு சிலுவையில் அறைந்து தீர்த்தார். அதினாலே உங்களிலிருக்கும் அந்த நீ மன்னிக்க இயலாத நீ - தனக்குத் தீது செய்தவர்களை நேசித்து அரவணைக்கமுடியாத நீ - அறையப்பட்டு, அப்புறப்படுத்தப்பட்டாயிற்று. தேவன் சிக்கலான சூழ்நிலை அனைத்தையும் சிலுவையிலே தீர்த்துவிட்டார். ஆகையால், நீர் செய்யத்தக்க எந்தக் காரியமும் விட்டுவைக்கப்படவில்லை. கர்த்தாவே, மன்னிக்க என்னால் முடியவில்லை. இதற்காக நான் இனி ஒன்றும் பிரயாசப்படப்போகிறதுமில்லை. ஆனால், எனக்காக அதை நீரே செய்வீர் என்று உம்மில் நம்பிக்கை வைக்கிறேன். என்னால் மன்னிக்கவும் முடியவில்லை. அன்புகூரவும் இயலவில்லை. நீரே எனக்காக மன்னிப்பீர் என்றும் அன்புகூருவீர் என்றும் இவைகளை என்னிலேயும் நிறைவேற்றுவீர் என்றும் நம்பி உம்மையே சார்ந்திருக்கிறேன் என்று மட்டும் ஆண்டவரிடம் சொல்லுங்கள் என்றேன்.

அந்த மனிதன் ஆச்சரியமுற்றவனாக இவைகள் எல்லாம் எனக்கு முற்றும் புதிய காரியங்களாயிருக்கின்றன. இதைக் குறித்து நான் செய்யவேண்டியது என்ன? என்றார். பின்பு சிறிது சிந்தித்து, நான் செய்யக்கூடியது ஒன்றும் இல்லையே! என்று கூறினார். அதற்கு நான் நீர் செய்கிறவர்களை எல்லாம் எப்பொழுது நிறுத்துவீர் என்று தேவன் காத்துக்கொண்டிருக்கிறார் என்றேன். உம் பிரயாசங்களை நீர் நிறுத்தும்பொழுது தேவன் தம் கிரியைகளை ஆரம்பிக்கிறார். தண்ணீரில் அமிழ்ந்து போகிற ஒருவனை எப்பொழுதாவது நீங்கள் தூக்கிவிட்டிருக்கிறீர்களா? அதை செய்யத்தக்கதான இரண்டு வழிகள் உண்டு. ஒன்று முழ்கிறவனைப் பிரக்கினை அற்றுப்போகும்படி செய்து, பின்பு அவனைக் கரைக்கு இழுக்கவேண்டும். அல்லது முற்றும் களைத்துப்போகுமளவும் அவனை அவதிப்படவிட்டுத் தன் முயற்சிகளை நிறுத்தி, ஓய்ந்து களைத்துப்போன பின்பு தூக்கிவிடவேண்டும். அவனுக்குப் பெலன் இருக்கும்பொழுது அவனைத் தூக்கமுயன்றால், அவன் தனக்குள்ள பயத்தினால் உம்மையும் சேர்த்து மூழ்கடித்துவிடுவான். அப்பொழுது இருவரும் மரிக்க நேரிடும். தேவன் உம்மை விடுவிக்கும் முன்னதாக நீர் உம்முடைய பெலனத்தனையும் செலவழித்து தீர்த்து விடும்படியாகக் காத்துக்கொண்டிருக்கிறார். நீர் எதையும் செய்துவிட்டு ஓய்ந்த பின்பு அவர் எல்லாவற்றையும் செய்வார். நீர் களைத்து ஓயுமட்டாக, ஆண்டவர் காத்துக்கொண்டிருக்கிறார் என்றேன்.

இதை கேட்ட என் நண்பர் குதித்தெழுந்தார். இப்பொழுது எனக்கு விளங்குகிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், எல்லாம் சரியாயிற்று. நான் செய்யக்கூடியது

ஒன்றுமேயில்லை. அவர் எல்லாவற்றையும் செய்துமுடித்தார் என்று சொல்லி பிரகாசமான முகத்துடன் மகிழ்ச்சியுள்ளவறாக திரும்பிச் சென்றார்.

சுவிசேஷங்களில் உள்ள எல்லா உவமைகளிலும் கெட்ட குமாரன் கதையே நாம் தேவனை பிரியப்படுத்தும் முறையைச் சிறந்தவிதமாய் எடுத்துக்காட்டுகிறது. லூக்.15:432ல் நாம் சந்தோஷங்கொண்டாடி மனமகிழ வேண்டுமே என்று அந்தத் தகப்பன் உரைத்த வார்த்தைகள் மூலமாய் மீட்பைப் பொறுத்தமட்டில் பரமபிதாவின் இருதயத்தை மிகுதியும் மகிழ்விக்கிற காரியம் இன்னதென்று இயேசு வெளிப்படுத்துகிறார். தகப்பனுக்காக இடைவிடாமல் உழைக்கிற மூத்த குமாரன் அல்ல, தகப்பனுக்காக ஒன்றும் செய்யாது, தனக்கான எல்லாவற்றையும் தகப்பனையே செய்யும்படி விட்டுவிடுகிற இளைய குமாரனே அவரை மகிழ்விக்கிறவன் ஆவான். எப்பொழுதும் உழைத்துக் கொடுக்கிறவனாகக் காணப்படுகிற மூத்த சகோதரன் அல்ல, எப்பொழுதும் பெற்றுக்கொள்கிறவனாகவே இருக்கிற இளைய சகோதரனே. கெட்ட குமாரன் தன் ஆஸ்திகளைத் தீய வழிகளில் அழித்துப்போட்டுத் தகப்பன் வீடுதிரும்பியபொழுது, ஆஸ்தியைப் பற்றிய கேள்வியோ, தீயசெலவைப் பற்றிய கடிந்துகொள்ளும் சொற்களோ, தகப்பன் வாயிலிருந்து வரவில்லை. அழிக்கப்பட்ட சொத்தைக் குறித்து தகப்பன் வருத்தப்படவுமில்லை. மகன் திரும்பி வந்ததினால், தான் இன்னும் அதிகமாகச் செலவழிக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததற்காகவே தகப்பன் சந்தோஷப்பட்டான்.

தேவன் மிகுந்த செல்வந்தராயிருக்கிறபடியினால், ஈகைதான் அவருடைய பிரதான மகிழ்ச்சி. அவருடைய பொக்கிஷசாலைகள் மிகுந்து நிறைந்திருக்கிறபடியால், அத்திரட்சிகளை நம்மீது அள்ளித் தூவுவதற்கான சந்தர்ப்பத்தை அவருக்கு நாம் அளிக்காதிருப்பதே அவருக்கு வருத்தத்தைத் தருகிறது. மனந்திரும்பிய குமாரன்மூலமாய், தாம் அடைந்த சந்தோஷத்தின் மிகுதியே உயர்ந்த வஸ்திரம், மோதிரம், பாதரட்சைகள், பெரிய விருந்து ஆகியவற்றை வைக்கும்படி ஏவிற்று. மூத்த குமாரன் மூலமாய் தாம் கொண்ட வருத்தம் இத்தகைய ஏவுதலுக்கு வழியில்லையே என்பது. தேவனுக்குப் பணம் கொடுக்கும்படி நாம் முயல்வது அவருக்கு வருத்தத்தை விளைவிக்கிறது. மிகுந்த செல்வந்தராய் உள்ளார் நம் தேவன். திரும்ப திரும்ப அவர் நமக்கு வழங்கும்படி நாம் இடம் கொடுப்பதே அவருக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தருகிறது. மிகுந்த செல்வந்தராய் உள்ளார் நம் தேவன். திரும்பத் திரும்ப நமக்கு வழங்கும்படி நாம் இடம் கொடுப்பதே அவருக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தருகிறது. அவருக்காகக் காரியங்களைச் செய்ய முற்படுவதோ அவருக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது. ஏனெனில் அவர் மிகுதியும் வல்லவராய் இருக்கிறார். தேவன் தமது கிரியையை இடைவிடாது மென்மேலும் செய்ய நாம் வழிவகுத்துவிடுவதையே அவர் பெரிதும் ஆசிக்கிறார். நித்திய

கொடையாளியாகவும் நிலையான கிரியை செய்கிறவராகவுமே இருக்க விரும்புகிறார் தேவன். அவர் எவ்வளவு பெரிய ஐசுவரிய சம்பன்னரென்றும், எத்தனை மகத்துவ வல்லமையுள்ளவரென்றுமட்டும் நாம் கண்டு கொள்வோமானால் எல்லாச் செயல்களையும் ஈகைகளையும் அவருக்கே விட்டுவிடுவோம்.

தேவனைத் திருப்திசெய்யும் முயற்சிகளினின்று நீ ஓய்ந்திருந்தாயானால், உன் நல்நடத்தையும் நின்றுவிடும் என்று நினைக்கிறாயா? தேவனுக்கான உன் வேலைகளையும் உன் ஈகைகளையும் நிறுத்திவிடுவாயானால், அவைகளைச் செய்வதினால் உண்டாகும் நன்மையைவிடக் குறைந்த நன்மையே உண்டாகும் என்று எண்ணுகிறாயா? நம்மாலே காரியங்கள் சாதிக்கப்பட வேண்டும் என்று நாம் முயலும்பொழுதுதான் மறுபடியும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழாக நம்மைக் கொண்டுவருகிறோம். ஆனால் நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் அதாவது நம்முடைய நல்ல செய்கைகள் தேவன் வெறுக்கும் செத்த கிரியைகள்தான். இந்த உவமையில் மூத்த குமாரனும், மனந்திரும்பிய குமாரனுமாகிய இருவரும் தகப்பன்வீட்டு மகிழ்ச்சிக்குத் தூரமானவர்களாகவே இருந்தனர். மூத்த சகோதரன் தகப்பன் வீட்டிலிருந்தபோதிலும் தூரதேசத்தில் தரித்திருக்கிற நிலையிலேயே இருந்தான். அவன் தன் தகப்பனுக்குக் காட்டின நியாயங்கள் மனந்திரும்பிய குமாரனுடையதைப்போல நடைமுறைக்கு ஒவ்வாததாக இருந்தது. ஏனெனில், அவன் தன்னுடைய சொந்த நற்கிரியைகளை விட்டுவிட மறுத்துவிட்டான்.

கொடுப்பதை நீ நிறுத்து. தேவன் எவ்வளவு பெரிய கொடைவள்ளல் என்பதை அறிந்துகொள்வாய். நீ உன் கிரியைகளை நிறுத்து. தேவன் எவ்வளவு பெரிய கிரியை செய்கிறவர் என்பதை காண்பாய். இளையகுமாரன் முற்றும் தவறினவனாயினும், அவன் வீடு திரும்பி இளைப்பாறுதலைக் கண்டடைந்தான். இங்கேயே கிறிஸ்தவ ஜீவியம் துவங்குகிறது. தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே..... கிறிஸ்து இயேசுவுக்குள்....... உன்னதங்களிலே அவரோடகூட (நம்மை) உட்காரவும் செய்தார் (எபேசி.2:4,7). நாம் சந்தோஷம் கொண்டாடி மனமகிழ வேண்டுமே.

## நட

நடப்பதிலல்ல உட்காருதலிலே கிறிஸ்தவ அனுபவம் துவங்குகிறதென்பதைத் தெளிவாக்க முயன்றோம். தேவ ஒழுங்காகிய இந்த முறையை நாம் மாற்ற முயல்வது கேட்டை விளைவிக்கிறது. கர்த்தராகிய இயேசு நமக்காக எல்லாவற்றையும் செய்து முடித்தார். இப்பொழுது நாம் செய்யவேண்டியது,

நம்பிக்கையுடன் அவர்மேல் சார்வதே. சுயபலத்தினால் எதையேனும் செய்ய நாம் இறங்குவோமானால், கடந்து செல்லமுடியாத பெரிய தடுப்புச் சுவருக்குமுன் நிற்கிறவர்களாவோம். ஆண்டவரை நம்பி, அவரைச் சார்கிறதினால் மட்டுமே, அவர் பலத்தினால் நாம் கொண்டு போகப்படுவதைக் காண்போம். உண்மையான ஆவிக்குரிய அனுபவங்கள் எல்லாம் இயேசுவுக்குள் மனநிம்மதி அடைவதினால் தான் உற்பத்தியாகின்றன என்பதை நாம் மிதமிஞ்சிய வகையாக வலியுறுத்தக்கூடுமோ?

ஆனால் இதோடு அது முடிவடைகிறதில்லை. கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பம் உட்காருதலேயானாலும், உட்காருதலுக்கடுத்ததாக நடத்தலே எப்பொழுதும் தொடருகிறதாயிருக்கிறது. மெய்யாகவே உட்கார்ந்து, அதனாலுண்டாகும் பலத்தைப் பெற்றுக்கொண்டிருந்தோமானால், அதுவே நாம் உண்மையில் நடக்கத் துவங்கினதாம். உன்னதங்களில் கிறிஸ்துவுடனேகூட நமக்குள்ள நிலையை உட்காருதல் விவரிக்கிறது. நடப்பதென்பதோ, இவ்வுலகில் அனுபவ செயல்களாக உருவாகும் அப்பரலோக மேன்மையின் வெளிப்பாடுகளாம். நாம் பரலோகத்திற்குரிய ஜனமாயிருப்பதால் இந்தப் பூலோக வாழ்வில் அந்த உன்னதத்திற்கேற்ற நடக்கையுள்ளவர்களாயிருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இதனால் பல புதிய பிரச்சனைகள் எழும்புகின்றன. அப்படியானால் இதை குறித்து எபேசியர் நிருபம் சொல்லுகிறதென்ன? அது நமக்கு இரண்டு காரியங்களை வற்புறுத்துகிறதாகக் காண்கிறோம். அவைகளில் முதல் காரியத்தைப்பற்றி இப்பொழுது கவனிப்போம்.

ஆதலால், கர்த்தர் நிமித்தம் கண்டுண்டவனாகிய நான், உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும்...... உடையவர்களாய் ஜாக்கிரதையாயிருங்கள் (4:1-3).

ஆதலால் கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்ற புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருந்து... உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாயிருங்கள் (4:17-23).

கிறிஸ்து நமக்காகத் தம்மைப்.... பலியாக ஒப்புக்கொடுத்து, நம்மில் அன்புகூர்ந்ததுபோல நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள் (5:2).

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்து... வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள் (5:10,8).

நட என்ற பதம் எபேசியரில் எட்டு முறை வருகிறது. நடந்தேகுதல் என்பதே உட்கருத்து. இங்கே செவ்வைபண்ணுவது என்று பொருள்படும். இது கிறிஸ்தவ வாழ்க்கையின் இலட்சணங்கள் என்ற பொருளைக் காட்டுகிறது. இந்நிருபத்தின் இரண்டாம் பகுதியில் அதிகமாகப் பேசப்படுவது இதுவே. நல்நடக்கையின் தேர்ச்சி, நமக்கும் அடுத்தவனுக்குமுள்ள உறவையும், சம்பந்தத்தையும் பொருத்தாயிருக்கிறதால், இதை அடிப்படையாகக் கொண்டதாகவே இந்தப் பாகம் அமைந்திருக்கிறது. விசுவாசிகளுக்குள்ளும், அயலகத்தாருக்குள்ளும், புருஷர் மனைவிகளுக்குள்ளும், பெற்றோர் பிள்ளைகளுக்குள்ளும், எஜமான் ஊழியக்காரருக்குள்ளும் இருக்கிற உறவுமுறைகளை அனுபவ முறைக்கேற்றபடி விவரிக்கிறது இந்தப் பகுதி. நீடிய பொறுமையுடையவர்களாய், அன்பினால், ஒருவரையொருவர் தாங்கி நடவுங்கள். பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள். இனி திருடாமல் இருங்கள். சகலவிதமான கசப்பும்... உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும்.... இருந்து ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து (அடங்கி) இருங்கள். கீழ்ப்படிந்திருங்கள். கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள். இந்தக் கட்டளைகளைவிட அதிக சாதனையாக இருப்பது எது?

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் உபதேசமும் இதேவிதமாய் ஆரம்பிக்கிறது. மலைப்பிரசங்கத்திலுள்ள இப்பாகத்தின் வார்த்தைகளைக் கருத்தாய்க் கவனியுங்கள். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடே வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் (மேல்வஸ்திரத்தையும்) விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வர பலவந்தம்பண்ணினால் அவனோடே இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னிடத்தில் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே. உனக்கடுத்தவனைச் சிநேகித்து உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள். அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி,

நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்களும் சிநேகிப்பீர்களானால் உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா? ஆகையால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள் (மத்.5:38-48).

ஆனால் இவைகளை என்னால் செய்யமுடியாதே! இக்கட்டளைகளைக் கைக்கொள்வது அசாத்தியமல்லவா என்று நீங்கள் சொல்லுவீர்கள். என்னுடைய எஞ்சினியர் நண்பனுக்கேற்பட்டதுபோலவே நீங்களும் தீமைக்குள்ளாக்கப்பட்டிருக்கலாம். ஒருவேளை அது பயங்கரமானதாகவேயிருக்கலாம். இதை மன்னிக்கிறதென்பதே உங்களுக்குக் கூடாத காரியம்போல இருக்கும். உங்கள் நடத்தை நியாயமாகவும், உங்கள் பகைவனின் நடத்தை முற்றிலும் அநியாயமாகவும் இருக்கலாம். அவனில் அன்புகூருகிறது சிறந்த இலட்சணமாயினும் அது சாத்தியமற்றதாயிருக்கிறது.

ஆதாம் நன்மை தீமை அறியும் விருட்சத்தின் கனியைப் புசித்த நாள்முதல், மனிதன், நன்மை இது, தீமை இது என்று தீர்மானிப்பதில் முற்பட்டிருக்கிறான். ஜென்ம சுபாவ மனிதன் சரி தவறு இவை என்றும், நியாயம் அநியாயம் இவை என்றும், தான் சொந்தமாக ஓர் அளவுகோலை வகுத்துக்கொண்டு அதன்படி நடக்கப் பிரயாசப்பட்டிருக்கிறான். கிறிஸ்தவர்களாகிய நாமோ வித்தியாசமானவர்கள். ஆம், அப்படியானால் நாம் எந்த வகையில் வித்தியாசமானவர்கள்? நாம் மறுபடியும் பிறந்த நாள் முதற்கொண்டு, நீதியைக் குறித்து ஒரு புது உணர்ச்சி நமக்குள் உருவாவதினிமித்தம் நன்மை தீமை இது, தீமை இது என ஆராய்வதில், நியாமானபடி, நாமும் ஈடுபட்டவர்களாயிருக்கிறோம். ஆனால், நமக்கோ, துவக்கம் முற்றிலும் வித்தியாசமானதொன்றிலிருக்கிறது என்று நாம் உணர்ந்திருக்கிறோமா? நமக்குக் கிறிஸ்துவே ஜீவ விருட்சம். அறிவுக்குகந்ததாய் தோன்றுகிற சரி, தப்பு என்பவைகளிலிருந்து - அதாவது நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்து நாம் ஆரம்பிக்கிறதில்லை. அதை நாம் இயேசுவில் ஆரம்பிக்கிறோம். ஜீவனும், ஜீவனுக்கடுத்ததுமே நமக்குரிய அடிப்படையான காரியம்.

சரியாக நடக்கப் பிரயாசப்படுவதும், பிறர் நேர்மையாக நடக்கும்படி கண்டிதம் பண்ணுவதுமே, நம் கிறிஸ்தவ சாட்சிக்கு மிகுந்த தீமையை விளைவிக்கிறதாயிருக்கிறது. தவறானது எது, சரியானது எது என்று அறிவதற்கு நாம் ஈடுபட்டிருக்கிறோம். நியாயமாகவே நான் நடத்தப்பட்டேன்? என்று நாம் அடிக்கடி நமக்குள் கேட்டுக்கொள்கிறோம். இவ்விதமாய் நம்முடைய செய்கைகள் நேர்மையானவைகள் என்று ரூபகாரப்படுத்தும்படி நாம்

யோசிக்கிறோம். ஆனால் நமக்குரிய பிரமாணம் அதுவல்ல. சிலுவை சுமத்தல் என்பதே நமக்குரிய எல்லா நீதியுமாகும். என் கன்னத்தில் அறைகிறது மற்றவனுக்கு நியாயமா என்று நீ கேட்கிறாய். இல்லவே இல்லை. ஆயினும் நியாயம் என்பதைமட்டும் நீ விரும்புவது போதுமா என்று நான் பதில் சொல்லுகிறேன். கிறிஸ்தவர்களாக நம்முடைய ஜீவிய பிரமாணம் ஒருபோதும் சரி அல்லது தவறு என்பதல்ல, சிலுவையின் பிரமாணமே நம் நடக்கையின் பிரமாணமாகும். சிலுவையின் தத்துவமே நம் நடக்கையின் தத்துவமாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! தேவன் நல்லோர்மேலும் தீயோர்மேலும் தமது சூரியனைப் பிரகாசிக்கப்பண்ணுகிறார். அது அவருக்கு நீதி அல்லது நியாயம் என்பதாயிராமல் தம்முடைய கிருபையின் விளைவாகவே இருக்கிறது. இதுவே நம்முடைய பிரமாணமுமாயிருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (4:32). இது சரி, அது தவறு என்பது புறஜாதியாருக்கும் ஆயக்காரருக்கும் உரிய பிரமாணமாகும். என் ஜீவியம் சிலுவையின் பிரமாணத்தினாலும் பரமபிதாவினுடைய பரிபூரண சற்குணத்தினாலும் ஆளப்படவேண்டும். பரலோகத்திலிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள். தென் சீனாவில் உள்ள ஒரு கிறிஸ்தவ சகோதரனுக்கு, மலைச்சாரலில் ஒரு நெல் வயல் இருந்தது. வறட்சியான காலங்களில் கீழேயுள்ள வாய்க்காலிலிருந்து தன் வயலுக்கு நீர் பாய்ச்ச ஒருவகை இயந்திர சக்கரம் உபயோகித்து வந்தான். அந்த வயலை ஒட்டித் தாழ்வாக அவனுடைய அயலானுக்கு இரண்டு வயல்கள் இருந்தன. ஓர் இரவு அந்த அயலான், இருவர் நிலத்துக்கும் இடையிலுள்ள கரையை உடைத்து நீரையெல்லாம் தன் வயலுக்குப்பாய்ச்சிக் கொண்டான். கிறிஸ்தவ சகோதரனோ உடைப்பைச் சரிப்படுத்தி தன் வயலில் தங்கும்படி அதிகத் தண்ணீர் இறைத்துவிட அவனுடைய அயலான் முன்போலவே மறுபடியும் செய்தான். இப்படி மூன்று நான்கு முறை நடந்தது. ஆகவே அவன் தன் கிறிஸ்தவ சகோதரரிடம்போய் இதை குறித்து விசாரித்தான். என் அயலானுடைய செய்கையைக் குறித்து எதிர்பேசாமல் பொறுமையாயிருக்க முயன்றேன். ஆனால், அவன் இப்படித் திரும்ப திரும்ப செய்வது சரியா? என்று அவர்களைக் கேட்டான். இந்தக் காரியத்தைக் குறித்து அவர்கள் ஜெபித்தார்கள். அதன்பின், ஒரு சகோதரன் நமக்குச் சரி எனப்படுகிறதைமட்டும் நாம் செய்யும்படி முயலுவோமானால், உண்மையாகவே நாம் குறைவுள்ள கிறிஸ்தவர்கள் ஆவோம். சரி என்பதைவிட மேலானதொன்றை நாம் செய்ய வேண்டியிருக்கிறது என்றான். அச்சொல் அந்தச் சகோதரனுக்குள் பலமாகக் கிரியை செய்தது. மறுநாள் காலையில் கீழேயிருந்த தன் அயலானுடைய வயல்கள் இரண்டிற்கும் நீர் பாய்ச்சிவிட்டு பிறகு மாலை வேளையில் தன்னுடைய வயலுக்கும் தண்ணீர் இறைந்துவிட்டான். அப்பொழுது அவன் வயலில் தண்ணீர் தங்கி நின்றது. அவனுடைய அயலான் இச்செய்கையைக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டு இதன் காரணத்தைக் கண்டு

கொள்ளும்படி ஆரம்பித்தான். சில நாள்களில் அவனும் ஓர் உண்மைக் கிறிஸ்தவனானான்.

ஆனபடியால், என் சகோதரரே, உங்கள் நியாயத்திலேயே நிலைத்திராதேயுங்கள். நீ இரண்டு மைல் தூரம் நடந்தபடியினால் நியாயமனதைச் செய்துவிட்டதாக எண்ணாதே. நடந்து சென்ற இரண்டாம் மைல் மூன்றாம் நான்காம் மைலுக்கு முன்னடையாளமாம். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாவதே இலட்சியம். நாம் நம்முடையதென்று சொல்லக்கூடியதும், கேட்டுக்கொள்ளக்கூடியதும் வினவக்கூடியதும் ஒன்றுமே இல்லை. நம் காரியம் கொடுப்பதே. கர்த்தராகிய இயேசு சிலுவையில் மரித்தபோது, அவர் நம்முடைய உரிமைகளை நிலைநிறுத்தும்படி அப்படிச் செய்யவில்லை. கலப்பற்ற கிருபையே அவரைச் சிலுவைக்கு நடத்தினது. ஆகவே, மற்றவர்களுக்கு உரிமையானதையும் அதற்கு அதிகமானதையுமே எப்பொழுதும் கொடுக்கும்படி கிறிஸ்துவின் பிள்ளைகளாக நாம் பிரயாசப்படுவோம்.

நாமே அநேக முறை சரியாக நடந்துகொள்ளுகிறதில்லை என்று நம்மை அடிக்கடி நினைப்பூட்டிக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. நாம் தவறுகிறோம். நம்முடைய தவறுதல்களின்மூலம் ஏற்ற பாடம் கற்றுக்கொள்வது நல்லது. குறைவுகளை, தவறுகளை அறிக்கையிடவும் அதற்கு மேலாகச் செய்யவும் நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருப்பது உசிதம். இதை ஆண்டவர் விரும்புகிறார். ஏன்? இப்படிச் செய்வதினால், நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள் (மத்.5:45). நடைமுறைக்கேற்ற புத்திர சுவிகாரமே காரியம். தேவன் நம்மை இயேசு கிறிஸ்துமூலமாய் தமக்குச் சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் என்பது உண்மையே (1:6). ஆனால் நாம் பூரண புருஷராக வளர்ந்துவிட்டோம் என்று தப்பிதமாய் எண்ணிக்கொள்ளுகிறோம். பிதாவுடன் ஒரே தன்மையும் அவர் ஆவியின் சுவிகாரத்தையும் தங்களில் வெளிப்படுத்தும் அளவுக்குத்தக்குதாகவே, பிள்ளைகள் புத்திரருக்குரிய தகுதியை அடைகிறார்கள் என்றே மலைப்பிரசங்கம் நமக்குப் போதிக்கிறது. அவருடைய கிருபையை விளங்கப்பண்ணுகிறவர்களாய் அன்பில் பூரணப்பட்டவர்களாயிருக்கும்படியே நாம் அழைக்கப்பட்டோம். ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை..... ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள் என்று பவுல் எழுதுகிறார் (5:1.,2).

இது நமக்கு ஓர் அறைகூவல். நம்மால் முடியாது என்று சொல்லும் வண்ணமாக, மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தில் ஓர் அளவுகோல் அமைந்திருக்கிறது. பவுலும் எபேசியர் நிருபத்தின் இந்தப் பகுதியில் அதையே வலியுறுத்துகிறார். நம்முடைய

சங்கடம் யாதெனில், இந்த நெறிகளுக்கிணங்க, பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி (5:3) நடந்துகொள்ளும் அந்த அளவைப் பெற்றுக்கொள்ளத்தக்க வழிவகைகள், இயற்கை சுபாவ முறைப்படி நம்மில் பெறாதிருப்பதே ஆகும். அப்படியானால், தேவன் நம்மிடத்தில் எதிர்நோக்கும் பரிசுத்தமான நடக்கைக்குரிய இரகசியம்தான் என்ன?

இதன் இரகசியம் நமக்குள் கிரியை செய்கிற வல்லமையின்படியே (3:20) என்ற பவுலின் வார்த்தைகளில் அடங்கியுள்ளது. இப்படியே வேறொரு இடத்திலும், நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன் என்று கூறுகிறார் (கொலோ.1:29). எபேசியர் முதல் பாகத்திற்கே நாம் மறுபடியும் வந்திருக்கிறோம். ஆம், பவுல் முதலாவது உட்காரும்படி கற்றுக்கொண்டார். அவருடைய கிறிஸ்தவ நடத்தை அவர் உட்கார்ந்ததையே சார்ந்திருக்கிறது. தாம் கிறிஸ்துவில் உட்கார்ந்திருக்கக் கண்ட பவுல், கிறிஸ்து தமக்குள் வாசமாயிருக்கிறதினால், நடக்கவும் ஏதுவாயிற்று இதனாலேயே விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்க வேண்டுமென்று எபேசிய விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளுகிறார்(3:7).

என் கைக்கடிகாரம் எப்படி ஓடுகிறது? அசைகிறதினாலோ அல்லது அசைக்கப்படுகிறதினாலோ? புறம்பேயுள்ள ஒரு சக்தி அதை முதலில் அசைக்கிறதினாலேயே அது ஓடுகிறது. அப்பொழுதுதான் அதற்கு நியமிக்கப்பட்ட வேலையை அது செய்யும். ஏனெனில் நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாகவே அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்(2:10).

பவுல் அப்போஸ்தலன் ஜீவியத்தினால் உண்டான வெளியரங்கமான கிரியைகளெல்லாம், அவருக்குள் தேவன் செய்த உள்ளான கிரியைகளின் வெளிப்பாடுகள் அல்லாமல் வேறல்ல. தேவன் தாமே பவுலுக்குள்ளாகக் கிரியை செய்துவந்தார். அவரே பவுலுக்குள் மிகவும் அதிகமாய் கிரியை செய்கிற வல்லமை ஆனார். அதன் விளைவாகவே வெளியரங்கமான கிரியைகள் சிலவற்றைப் பவுல் செய்ய முடிந்தது. பிலிப்பியருக்கு அவர் எழுதும்பொழுது அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் என்றார்(பிலி.2:12,13). தேவன் உள்ளாகக் கிரியை செய்ய, நாம் அதை வெளியரங்கமாக்கவேண்டும். இதுவே இரகசியம். தேவனே நமக்குள் கிரியை செய்ய நாம் இடம் கொடுத்தாலொழிய வெளியரங்கமாய் நற்கிரியைகளைச்

செய்யும் பிரயாசம் பயனற்றுப்போகும். கிறிஸ்துவின் தாழ்மையையும் இரக்கத்தையும் தேவன் நம்மில் நடப்பிக்க இடங்கொடாமல் இரக்கமுள்ளவர்களாயும், தாழ்மையுள்ளவர்களாயும் இருக்க அடிக்கடி நாம் முயற்ச்சி செய்கிறோம். நாம் பிறருக்கு அன்பைப் பாராட்டப் பிரயாசப்படுகிறோம். ஆயினும் நாம் அன்பற்றவர்களாய் இருக்கிறதைக்கண்டு ஆண்டவரிடம் அன்பைக் கேட்கிறோம். அதை அவர் நமக்குக் கொடாதிருக்கிறதைக் கண்டு ஆச்சரியப்படுகிறோம்.

நான் முன்பு சொன்ன உதாரணத்தையே திரும்ப சொல்லட்டும். உனக்குச் சோதனையாகவும் அடிக்கடி கஷ்டம் விளைவிக்கிறவனாகவும் உள்ள ஒரு சகோதரன் உனக்கிருக்கலாம். அவனைச் சந்திக்கும்போதெல்லாம் உனக்கு வருத்தம் உண்டாக்கக்கூடியதொன்றை சொல்லவோ செய்யவோ முற்படுகிறான். இதனால் உன் மன நிம்மதி பாதிக்கப்பட்டிருக்கிறது. நான் கிறிஸ்தவனானபடியினால் அவனின் அன்புகூரவேண்டும். அவனை நேசிக்க விரும்புகிறேன். உண்மையாகவே அன்பு கூரும்படி நான் நிர்ணயித்துள்ளேன் என்று நீ சொல்லிக்கொண்டு, கர்த்தாவே, அவனுக்காக என் உள்ளத்தில் அன்பைக் பெருக்கியருளும். ஆண்டவரே, எனக்குள் அன்பை ஊற்றும் என்று ஊக்கமாய் ஜெபிக்கிறாய். பின்பு உன் சித்தத்தையெல்லாம் ஒன்றுதிரட்டி பெரிய தீர்மானம் செய்தவனாய், ஜெபித்த பிரகாரமாகவே மெய்யான ஆவலோடு உள்ளான அன்பை வெளிப்படுத்த வேண்டுமென்றிருக்கிறாய். ஐயோ! பரிதாபம்! அவனுக்கு முன் நீ வரும்போதோ உன்னுடைய நன்மையான தீர்மானம் முறிந்துபோகத்தக்கதாக ஏதோ ஒன்று நடைபெறுகிறது. அவன் செய்கைகள் உனக்குக் கிஞ்சித்தேனும் உதவியாயிராமல் உன் நல்ல தீர்மானங்களுக்கு முரண்பாடாகவே இருக்கின்றன. உடனே உன்னுடைய பழைய குரோதங்கள் எழும்பிவிடுகின்றன. நீ அவனுடன் கௌரவமாய் நடந்து கொள்வதேயொழிய அவனை நேசிக்க முடியாதவனாயிருக்கிறாய். இது ஏன்? தேவனிடத்திலிருந்து அன்பைப்பெற ஆசைப்படுகிறதில் நீ தவறு செய்யவில்லை. ஆனால், தன்னில் தானாகவே அந்த அன்பைப்பெற விரும்பினதே நீ செய்த தவறு. தம்முடைய சொந்த அன்பின் ஏவுதலினாலே, உன்மூலம் தேவன் தாமே நடப்பிக்கக்கூடியதை நீ உன் சுயபெலத்தினாலுண்டாகிய தீர்மானத்தின் வல்லமையாலே செய்யும்படி பிரயாசப்பட்டதும், தேவ ஈவாகிய இயேசுவை இதற்கென்று உபயோகிக்க முற்பட்டதுமே, உன்னுடைய தவறு. இதுவே வித்தியாசம் ஆ! இதைக் காணும் கண்கள் நமக்கிருந்தால் நலமாயிருக்குமே!!

நமக்காக தேவன் கிறிஸ்துவைத் தந்தருளினார். கிறிஸ்துவுக்குப் புறம்பே நாம் பெற்றுக்கொள்ளக்கூடியது ஒன்றுமே இல்லை. கிறிஸ்துவில்லாதவைகளையோ, அவருக்கு அப்பாற்பட்டவைகளையோ அல்ல, கிறிஸ்துவிலுள்ளவைகளையே, நமக்குள் உருவாகும்படி பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டிருக்கிறார். நாம்

அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்.... கிறிஸ்துவினுடைய.... அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும் வேண்டும்(3:16,18,19). நாம் புறம்பாக வெளிப்படுத்துகிற கிரியைகளெல்லாம் முதலில் தேவன் நமக்குள் வைத்தவைகளேயாகும்.

1 கொரிந்தியர் 1:10,31 வசனங்களை நினைவுக்குக் கொண்டுவாருங்கள். நாம் தேவனாலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறதில் காரியம் நின்று விடுவதில்லை. அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானவர். இது வேதத்தின் மகத்துவமான சத்தியங்களில் ஒன்று. அவர் நமக்கு... ஆனார். இதை நாம் விசுவாசித்தோமானால், நமக்குத் தேவையான எதையும் அதிலே வைத்து செய்துமுடித்தார் என்று நிச்சயித்திருக்கலாம். ஏனெனில் நமக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியினால் நம் குறைவுகளில் எல்லாம் கர்த்தராகிய இயேசு தாமே நிறைவானவர். பரிசுத்தத்தை நற்குணம் என்றும், மனத்தாழ்மையைக் கிருபையென்றும், அன்பை ஒரு வரம் என்றும் கருதி நாம் இவைகளைத் தேவனிடத்தில் தேடி அடைய வேண்டியவைகள் என்று நினைப்பது வழக்கமாகிவிட்டது. ஆனால் நம் தேவைகள் எவையாயினும் தேவனுடைய கிறிஸ்துவானவர்தாமே எல்லாவற்றிற்கும் எல்லாமுமாயிருக்கிறார். என்னுடைய தேவைகளில் அநேகமுறை கிறிஸ்துவை, அப்பாலுள்ள ஒருவராகக் கருதிக்கொண்டு நான் குறைவுள்ளவனாக உணர்த்தப்படுகிற விஷயங்களில் அவரைச் சம்பந்தப்படுத்திக்கொள்ள அறியாதவனாக இருந்தேன். இரண்டு ஆண்டுகள் இவ்விதமாய்க் கடந்தன. இருட்டில் தடவிக்கொண்டிருக்கிறவனாகக் காணப்பட்டேன். கிறிஸ்தவ ஜீவியத்தை உருவாக்க அவசியம் என்று எனக்குத் தோன்றிய நற்குணங்களைச் சேகரிக்கத்தக்கதாய்ப் பிரயாசம் வெகுவாய் எடுத்தும் அதில் சிறிதும் வெற்றி காணாதவனாயிருந்தேன். பின்பு 1933 ஆம் ஆண்டிலே ஒருநாள், எனக்குள் வெளிச்சம் உதித்தது. கிறிஸ்துவானவர் தம்முடைய பரிபூரணத்திலே, எனக்குப் பிணையாளியாயிருக்கும்படி தேவனால் நியமிக்கப்பட்டிருக்கக்கண்டேன். எவ்வளவோ வித்தியாசம்! காரியங்கள் அத்தனையும் எவ்வளவு வெறுமையாயின! கிறிஸ்துவுடனே சம்பந்தப்படாதவைகளாகக் கருதப்படும்பொழுது அவைகள் ஒன்றுமில்லாதவைகளாயின. இதை நாம் கண்டு கொள்ளுகிறது நம்மில் ஒரு ஜீவியம் ஆரம்பிக்கிறதற்கு ஒப்பாகும். இனிமேல் நம்முடைய பரிசுத்தமும் அன்பும் தேவனாலானதும் தேவனுடையதுமாகும். தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் காரியங்கள் யாவற்றிற்கும் இயேசுதாமே நிறைவேறுதலாய் நம்மில் வெளிப்படுகிறார்.

இப்பொழுது, கஷ்டம் கொடுக்கிற அந்தச் சகோதரனைச் சந்திக்கப்போ. ஆனால் நீ போகும்முன் தேவனை நோக்கி, கர்த்தாவே, அவனில் அன்புகூருவதென்பது என்னில் தானே முடியாக் காரியம் என்று இப்பொழுது தெளிவாகத்

தெரிந்துகொண்டேன். ஆனால், எனக்குள்ளாக ஒரு ஜீவன்-தேவகுமாரனுடைய ஜீவன்-இருக்கிறதை நான் அறிகிறேன். அந்த ஜீவனின் பிரமாணம் அன்புகூருதலே, அப்படியிருக்க, நான் அவனை நேசியாதிருப்பது எப்படி? என்று ஜெபி. இப்பொழுது முயற்சி செய்யவேண்டிய அவசியம் இல்லை. அவரில் அமர்ந்திரு. அவருடைய ஜீவனையே சார்ந்துகொள். இவ்விதம் தைரியம் கொண்டவனாய் அவனைச் சந்தித்துப் பேசு. இதோ! என்ன அதிசயம்! உன்னை அறியாமலே நீ அவனோடு சாதாரணமாகப் பேசுகிறதைக் காண்பாய் (தன்னறிவுக்குட்படாமலே நீ அவனோடு சகஜமாய்ப் பேசுவாய் என்று நான் சொல்லுகிறேன். ஏனெனில் சுய உணர்ச்சி பிறகுதான் வருகிறது). உன்னை அறியாமல் மெய்யாய் அவனில் அன்புகூருவாய், உன் சகோதரனாக அவனைக் கருதுவாய், உள்ளான ஐக்கியத்துடன் தாராளமாய் அவனோடு சம்பாஷிப்பாய். என்ன அதிசயம்! நான், பதைப் பதைப்பும் விசாரமுமுடையவனாய் இப்பொழுது சிறிதும் பிரயாசப்படாவிட்டாலும் என் இருதயத்தில் குமுறல் ஒன்றும் உண்டாகவில்லையே. சொல்லிமுடியாத ஏதோ ஒரு முறையில் ஆண்டவர் என்னோடுகூட இருந்தார். அவர் அன்பு ஜெயங்கொண்டது என்று நீ சொல்லிக்கொண்டு ஆச்சரியப்படுவாய்.

உள்ளானபடி, கிறிஸ்துவின் ஜீவன், தன்னில்தானே இயல்பாய் நம்மில் கிரியை செய்கிறது. அதாவது நமது சுய முயற்சிகள் எவையும் இல்லாமல், அது கிரியை செய்கிறது. முயற்சி என்பதல்ல, சார்ந்திரு என்பதே மிக முக்கியமான சட்டம். இது நம்முடைய சுய பலத்தில் சாராமல் அவருடைய வல்லமையிலேயே சார்ந்திருப்பது ஆகும். நாம் மெய்யாகவே கிறிஸ்துவில் இருக்கிறோம் என்பதை வெளியாக்குகிறது நம்மிலிருந்து புறப்படுகிற அவரது ஜீவ ஓட்டமே. இது ஜீவ ஊற்றாகிய இயேசுவிலிருந்து உற்பத்தியாகும் மதுரமான தண்ணீராம்.

கிறிஸ்தவர்கள்போல நடிப்பவர்களாக நம்மில் அநேகர் காணப்படுகின்றனர். இன்றைக்கு, அநேக கிறிஸ்தவர்களின் ஜீவியம் வெறும் பாசாங்கே. அவர்கள் ஆவியின் ஜீவியத்தைத் தழுவி, ஆவிக்குரிய வார்த்தைகளைப் பேசி ஆவியின் நடக்கைகளை அனுசரிக்கிறார்கள். எல்லாவற்றையும் தாங்களாகவே செய்கிறார்கள். தாங்கள் கையாளும் முயற்சியே தங்கள் வழி தவறானது என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும். இதைச் செய்யலாகாது, இதை சொல்லலாகாது, இதை சாப்பிடலாகாது என்று அவர்கள் தங்களை எவ்வளவாய்ப் பலவந்தம்பண்ணுகிறார்கள்! அது அவர்களுக்கு எவ்வளவு கடினமாக இருக்கிறது. இது நாம் நம்முடையதல்லாத ஒரு பாஷையைப் பேச முயல்வதுபோலவே இருக்கிறது. நாம் கடினப்பட்டு எவ்வளவு முயன்றாலும், அது இயல்பாக நமக்கு வருகிறதில்லை. அந்தப்படி பேச நாம் நம்மைப் பலவந்தப்படுத்தவேண்டியிருக்கிறது. ஆனால், நமது தாய் பாஷையைப் பேசும்பொழுதோ அதைவிட எளிதாய் இருக்கக்கூடிய காரியம் வேறு எதுவும்

இல்லை. நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை மறந்து போய்விடினும் பேசிக்கொண்டே இருக்கிறோம். அது பாய்ந்து வருகிறது. அது நமக்கு இயற்கையாக அமைந்திருக்கிறது. இயல்பாக நம்மிலிருந்து அது புறப்படுகிறதினாலே நாம் எந்தத் தேசத்தார் என்பதை எல்லாருக்கும் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் ஜீவனே நம்முடைய ஜீவியத்தின் உயிர். நம்மில் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியானவரே அதை நடத்துகிறவர். இயல்பாகவே பாய்வதே அந்த ஜீவனின் சட்டம். இந்தச் சத்தியத்தைக் கண்டறிந்தவுடனே, நாம் நம் போராட்டங்களைவிட்டு நடிப்புகளை உதறித்தள்ளுவோம். பாசாங்கு செய்வது கிறிஸ்தவ வாழ்க்கைக்குப் பெரிய தீங்கை விளைவிக்கிறது. நம் வெளியரங்கமான பிரயாசங்களைவிட்டு, ஓய்ந்து நம் நடக்கை உண்மையுள்ளதாயிருப்பது எத்தனை பெரிய பாக்கியம்! நம் வார்த்தைகள், ஜெபங்கள், ஜீவியம் எல்லாம் முயற்சியின்றி உள்ளேயிருக்கும் ஜீவனாலே இயல்பாய் எழும்புகிற வெளிப்பாடாக இருக்குமானால் இதுவே மிகுந்த ஆசீர்வாதமாம். ஆண்டவர் எவ்வளவு நல்லவர் என்று கண்டிருக்கிறோமா? அப்படியானால், நமக்குள் அந்தப்படி அவர் நல்லவரே. அவர் மிகுந்த வல்லமையுள்ளவரே. அப்படியானால், நமக்குள் அவர் குறைவற்றவர் அல்லவா? கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் ஜீவன் எப்பொழுதும் போல வல்லமை மிகுந்ததே. வேத வசனங்களை உள்ளவாறு விசுவாசிக்கத் துணிந்தவர்களுடைய ஜீவியத்தவர்களுடைய ஜீவியத்திலும் ஆதியில் வெளிப்பட்ட வல்லமையில் எவ்வளவும் குறையாத வல்லமையுடன் அவருடைய ஜீவன் வெளிப்படும். மத்தேயு 5:20ல் வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று சொல்லும்போது ஆண்டவர் கொண்ட அர்த்தம் என்ன? பல தடவை... உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்... என்பதாகச் சொல்லி, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு தாம் கூறின மேன்மையான ஒப்பற்ற நெறிகளுக்குமுள்ள வித்தியாசங்களைத் தெரியப்படுத்தின விதத்தை முன்பு பார்த்தோம். ஆனால் அநேக நூற்றாண்டுகளாக மனிதர்கள் நியாயப்பிரமாணத்தின் வழிகளில் நிற்க முயன்றும் முடியாதவர்களாய்த் தோல்வி அடைந்திருக்க, எப்படி ஆண்டவர் அவைகளில் அதிகக் கடினமான வழிகளை வகுக்கத் துணியலாம்? தமக்குள்ளிருந்த தம் ஜீவன் எப்படிப்பட்டதென்று அவர் அறிந்திருந்தபடியினாலேயே அவர் அவைகளை வகுக்க முடிந்தது.

அவைகளிலும் அதிகமானதும் உயர்ந்ததுமான நெறிமுறைகளைத் தம்மீது சுமத்தக் கிறிஸ்து தயங்கினவரல்லவே. மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் சொல்லியிருக்கிற இராஜ்யத்தின் சுவிசேஷங்களுக்கடுத்த நியமங்களைப் படிப்பது நமக்கு ஆறுதலாயிருப்பதின் காரணம், தம் பிள்ளைகளுக்கே உரியதாயிருக்கிற தம் சொந்த ஜீவன்பேரில் கிறிஸ்துவுக்கிருந்த நிச்சயமான

நம்பிக்கையேயாகும். இந்த மூன்று அத்தியாயங்களும் தெய்வீக ஜீவியத்திற்கடுத்த தெய்வீக சட்டங்களைத் தெரிவிக்கிறது. அவர் நம்மில் எதிர்பார்க்கிற சட்டங்கள் எவ்வளவுக்கெவ்வளவு உயர்வானவைகளாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கு அருளப்பட்டிருக்கிற அவருடைய போதுமான வல்லமையின் திராணியிலே அவா நிச்சயமுள்ளவராயிருக்கிறார். நமக்குள்ளிருக்கும் இந்த அவருடைய வல்லமையை, நம்மில் அவர் எதிர்பார்க்கிற எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது.

கடினமான எந்தச் சூழ்நிலையாவது நமக்கு மலைப்புண்டாக்குகிறதா? அது சரியோ, தவறோ அல்லது நன்மையோ, தீமையோ என்பதைப்பற்றிய பிரச்சனையா? அப்படியானால் விசேஷித்த ஞானத்தை நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தை நோக்கவேண்டியதுமில்லை. நமக்கென்று உள்ளவர் கிறிஸ்துவே. நமக்காக தேவனிடமிருந்து வந்த ஞானம் அவரே. கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், நல்லது இது, தீயது இது என்ற அவருடைய வழிமுறைகளை திரும்ப திரும்ப வெளிப்படுத்தி அதற்கேற்ப தகுதியின்படியே நமக்குள் தொடர்ந்து கிரியை செய்திருக்கிறது. அவர்களுடனே, அந்தக் கடினமான பிரச்சனையை எதிர்த்து நிற்கத்தக்க ஆவியும் நமக்குக் கொடுக்கப்படுகிறது.

நம்முடைய நடத்தையைச் சோதிக்கும்படியாகவும், மேலும் மேலும் அநேக காரியங்கள் சம்பவிக்கும் சிலுவையின் பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளவேண்டியது நமக்கு மிகவும் அவசியம். நம்முடைய தகுதி பழைய மனிதனுக்கடுத்ததாயிராமல், மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய (4:24) மனுஷனுக்கேற்றபடியே இருக்கவேண்டும். ஆண்டவரே, என்னை நான் நற்காத்துக்கொள்ளத்தக்க தகுதி எனக்கில்லை. எனக்குள்ளானவைகளெல்லாம் உம்முடைய மிகுந்த கிருபையாலே ஆயிற்று. எல்லா நிறைவும் உமக்குள்ளே இருக்கிறது என்று அறிக்கையிடுங்கள். நான் முதிர் வயதுள்ள ஒரு ஜப்பானிய ஸ்திரீயை அறிவேன். ஒருநாள் தன் வீட்டைக் கன்னமிட நுழைந்த ஒரு திருடனுக்குமுன் தான் நிற்கக்கண்டாள். ஆண்டவர்மேல் தனக்குள்ள குழந்தை விசுவாசத்துடன், அவனுக்கு ஆகாரம் சமைத்துக் கொடுத்து, பின்பு தன்னிடமுள்ள வீட்டுச் சாவியையும் தந்தாள். வெட்கத்திற்குள்ளாக்கும்படி செய்த அவளுடைய இந்தச் செய்கையின்மூலம், தேவன் அவனோடு பேசினார். அவளுடைய சாட்சியினிமித்தமாக இன்று அந்த மனிதன் கிறிஸ்துவுக்குள் ஒரு சகோதரனாக இருக்கிறான்.

கிறிஸ்தவர்களில் அதிகமானவர்கள் எல்லா உபதேசங்களையும் அறிந்தவர்களாயிருக்கிறார்கள். ஆயினும் அதற்கு மாறுபாடான ஜீவியமே அவர்களில் காணப்படுகிறது. எபேசியர் முதல் மூன்று அதிகாரங்களில் சொல்லியவைகளை அவர்கள் அறிந்தவர்களாயிருந்தாலும், கடைசி மூன்று அதிகாரங்களில் சொல்லப்பட்டவைகளைத் தங்கள் அனுபவத்திற்குக் கொண்டுவராதவர்களாக இருக்கிறார்கள். இப்படி மாறுபாடுள்ளவர்களாய் ஜீவிக்கிறதைவிட, போதகங்களை அறியாதிருக்கிறதே மேலானது. தேவன் ஒரு காரியத்தைக் கட்டளையிட்டிருக்கிறாரா? அப்படியானால் அவர் கட்டளையிட்டதைச் செய்து முடிக்கத் திராணி உள்ளவனாயிருக்கும்படி உன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடு. நன்மையானவை என்று நாம் கருதுகிறவைகளுக்கு மேலாக நடப்பதும், அதன்படி நடப்பதுமே கிறிஸ்தவ ஜீவியத்தின் முழுத்தத்துவமென்பதை ஆண்டவர் நமக்குப் போதிப்பாராக.

கிறிஸ்தவ நடக்கையைக் குறித்து நாம் மேலே பார்த்த காரியங்களைக் காட்டிலும் அதிகமாக நாம் தெரிந்துகொள்ளவேண்டியது இன்னும் சிறிது இருக்கிறது. நட என்ற பதம் கூடுதலான மற்றொரு அர்த்தத்தைக் உடையதாயும் இருக்கிறது. முதலாவதாக அது நடத்தை அல்லது செயல் என்பதைக் குறிக்கிறது. அதுமட்டுமல்லாமல், அது முன்னேறுதல் என்ற கருத்தை கொண்டதாயும் இருக்கிறது. நட என்பது முன்னேறுதல் என்றும் பின்தொடர்தல் என்றும் பொருள்படும். நமக்கு முன்னாக உள்ள இலக்கை நோக்கி முன்னேறுகிறதைக் குறித்து இப்பொழுது சிறிது பார்க்கலாம்.

ஆனபடியினாலே, நீங்கள் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளப் பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள் (5:15-17).

மேலே கூறிய வசனத்திலே ஞானம் மதியீனம் என்பவைகளுக்குள்ளாக வித்தியாசத்திற்கும், காலம் என்பதைக் குறிக்கும் கருத்துக்கும் ஒரு வகை தொடர்பு இருக்கிறதை பார்க்கலாம். ஞானமுள்ளவர்களைப்போல.... நடந்து... காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். ஆகையால், நீங்கள் மதியற்றவர்களாயிராமல்... இது முக்கியமான ஒரு காரியம். இதிலுள்ளளதைப்போலவே. இதே கருத்தை வெளிப்படுத்துகிற வேறு இரண்டு பாகங்களை உங்களுக்கு முன்கொண்டுவர விரும்புகிறேன்.

அப்பொழுது, பரலோக இராஜ்யம்.... பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர்

புத்தியில்லாதவர்களுமாயிருந்தாகள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள். எண்ணெயையோ கூடக்கொண்டு போகவில்லை..... நடுராத்திரியிலே, இதோ மணவாளன் வருகிறார். அவருக்கு எதிர்கொண்டுபோகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள்... எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்..... அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. பின்பு மற்றக் கன்னிகைகளும் வந்து.... (மத்.25:1-13).

பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் நிற்கக்கண்டேன்.... கற்புள்ளவர்கள் இவர்களே, ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே. இவர்கள் மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள். இவர்கள் வாயிலே கபடம் காணப்படவில்லை. இவர்கள்... மாசில்லாதவர்களாயிருக்கிறார்கள் (வெளி 14:1-5).

தேவன் துவக்கினவைகள் எவைகளோ, அவைகளை முடிக்கிறவரும் அவரே என்பதை வலியுறுத்தும் பாகங்கள் வேதத்தில் அநேகம் இருக்கின்றன. நம் இரட்சகர் முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராக இருக்கிறார். இரட்சிக்கப்பட்டவன் என்று பல பொருளில் (கருத்துக்களில்) நம்மைக் குறித்து இப்பொழுது நாம் சொல்ல இயலாதிருப்பினும் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவன் எவனும், முடிவில் அரைகுறையாக மீட்கப்பட்டவனாக இருக்கமாட்டான். கிறிஸ்துவிலே விசுவாசமுள்ள எந்த மனிதனையும், தேவன் பரிபூரணப்படுத்துவார். நாம் விசுவாசிகிறது இதுவே. தொடர்ந்து சொல்லப்படும் காரியங்களுக்கு உதவியாக இருக்கும்படி, இதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகிறது நல்லது. உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று (பிலி.1:5 பவுலுடன் கூட நாமும் திடநம்பிக்கையாயிருக்கிறோம். தேவனுடைய வல்லமைக்கு எல்லை கிடையாது. தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே... உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர் அவர் (யூதா 24, 2.தீமோ.1:12, எபேசி.3:20 பார்க்க).

ஆயினும் , இதை நடைமுறைக்கிணங்க வாழ்வில் கொண்டு வருகையிலே - இவ்வுலகத்துக்கடுத்த இந்த நமது ஜீவியத்துக்கேற்ப அதை

அனுபவரீதியாக்கும்போதே - நாம் காலம் என்கிற கட்டத்திற்குமுன் நிறுத்தப்படுகிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 14 ம் அதிகாரத்தில் முதற்பலனையும் (வச.4). அறுப்பையும் (வச.15). பற்றிப் படிக்கிறோம். அறுப்புக்கும் முதற்பலனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஒரே விளைச்சல் உண்டாயிருப்பதால், இது தரத்தை பொறுத்த வித்தியாசமாயிருக்கிறதற்கில்லை. அதன் வித்தியாசம் அவைகள் முதிர்கிற காலத்தைப்பற்றியதே. சில பழங்கள் மற்றவைகளைக் காட்டிலும் முன்னதாக முற்றிவிடுகிறதால் அவைகள் முதற்பலன் ஆயின.

வூக்கியன் மாகாணத்திலுள்ள என் சொந்த ஊர், ஆரஞ்சுப் பழங்களுக்குப் பெயர்பெற்றது. உலகெங்கும் அவைகளுக்கு ஈடான பழங்கள் வேறு கிடையாது என்று நான் சொல்லுவேன். ஆரஞ்சுப் பழக் காலத் துவக்கத்தில் மலைச்சரிவுகளைப் பார்ப்பீர்களானால், எல்லாத் தோப்புகளும் பச்சையாக இருக்கும். சற்று உற்றுப் பார்ப்பீர்களேயானால் இங்கும் அங்குமாக மஞ்சள்நிற ஆரஞ்சுகள் அதற்குள்ளாகத் தோன்றியிருக்கக் காண்பீர்கள். பச்சை மரங்களுக்கிடையில் தங்கப் புள்ளிகளாகத் தோன்றும் இந்தக் காட்சி, கண்களுக்கு மிக இனிமையாக இருக்கும். கடைசியில் விளைச்சல் முற்றி, தோப்பு முழுவதும் மஞ்சள் நிறமாகும். ஆனால், முதலில் இந்த முதற்கனிகளே சேர்க்கப்படும். அவைகளை ஒவ்வொன்றாக ஜாக்கிரதையாகக் கைகளினாலே பறித்துச் சேர்ப்பார்கள். இவைகளே சந்தையில் மிக அதிக விலைக்குப் போகும். சில சமயங்களில் பிந்தின பழங்களைப்போல மூன்றத்தனை விலையையும் பெறும்.

எல்லாக் கனிகளும், எப்படியும் இறுதியில் சேகரிக்கப்படும். ஆனால் ஆட்டுக்குட்டியானவர் முதற்பலனையே எதிர்பார்க்கிறார். பத்துக் கன்னிகைகள் உவமையில் உள்ள புத்தியுள்ளவர்கள் மற்றவர்களைவிட திறமையானவர்கள் என்று சொல்வதற்கில்லை. ஆயினும் அவர்கள் குறிப்பிட்ட வேளைக்குமுன் ஆயத்தமாயிருந்தனர். மற்ற ஐவரும் கன்னிகைகளே. அவர்கள் புத்தியற்றவர்கள் என்பது உண்மையேயாயினும் மாய்மாலக்காரர் என்று சொல்வதற்கில்லை. அவர்களும் புத்தியுள்ளவர்களோடுகூட மணவாளனை எதிர்கொண்டழைக்கப் போனவர்கள். அவர்களும் தீவட்டிகளில் எண்ணெய் வைத்திருந்தார்கள். அவர்கள் தீவட்டிகளை எரிந்துகொண்டும் இருந்தன. ஆனால், அவாகள் மணவாளனுடைய பிந்தின வருகையை எதிர் நோக்காதிருந்தனர். அவர்கள், தீவட்டிகள் அணைந்துபோகிற இந்தச் சமயத்தில், தங்கள் பாத்திரங்களில் கூடுதலான எண்ணெய் வைத்திருக்கவில்லை. அவர்களுக்குக் கொடுத்து உதவும்படி போதுமான எண்ணெய் மற்றவர்களிடமும் இல்லாதிருந்தது.

உங்களை அறியேன் என்று ஆண்டவர் புத்தியில்லாதவர்களுக்குச் சொன்ன வார்த்தைகளினிமித்தம் அநேகர் இங்கு தவறாகப் பொருள் கொள்கிறார்கள். அவர்கள் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்துவுக்கு..... ஒப்புக்கொடுக்க (2.கொரி.11:2). நியமிக்கப்பட்ட அவருடைய உண்மையான பிள்ளைகளாயிருந்தால், அவர் எப்படி இந்த வார்த்தைகளை உபயோகிக்கலாம் என்று, அப்படிப்பட்டவர்கள் சந்தேகப்படுகின்றனர். ஆனால் இந்த உவமையினால் போதிக்கப்படும் உள்ளான கருத்து யாதென்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும் அது, மறுமையில் ஆண்டருக்கு ஊழியம் செய்யும்படியாக நமக்கு இருக்கிற ஒரு சிலாக்கியத்தை, போதுமான ஆயத்தமின்மையால் அவருடைய பிள்ளைகள் இழந்துவிடக்கூடும் என்பதேயாகும். அவர்கள் கதவண்டை வந்து, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்று கூறினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எந்தக் கதவு அது? நிச்சயமாக அது இரட்சிப்பின் கதவல்ல. நீ இரட்சிப்பை இழந்தவனானால், பரலோகத்தின் வாசலண்டை வரவும், தட்டவும் இயலாதே! ஆகையால் நான் உங்களை அறியேன் என்ற ஆண்டவருடைய வார்த்தை, கீழே சொல்லப்படும் உதாரணத்தைக் கொண்டதாயிருக்கிறது.

சியாங்கை பட்டணத்தில் ஒரு போலீஸ் மாஜிஸ்திரேட்டின் மகன் சட்டத்திற்கு மீறின முறையில் வண்டியோட்டினபடியால் பிடிபட்டான். அவனை நியாயாசனத்திற்குமுன் கொண்டுவந்தார்கள். அவனுடைய தகப்பனார் நீதிபதியின் ஆசனத்தில் உட்கார்ந்திருந்தா. நியாய மன்றத்தின் முறைகள் எல்லாம் உலகம் எங்கும் அநேகமாக ஒரேமாதிரியாகவே இருக்கின்றன. அந்தப்படி, உன் பெயர் என்ன? உன் விலாசம் என்ன?

உன் உத்தியோகம் என்ன? என்பன போன்ற கேள்விகள் அவனிடம் கேட்கப்பட்டன. ஆச்சரியமுற்றவனாக அவன் தன் தகப்பனை நோக்கி, தகப்பனே, நீர் என்னை அறியவில்லை என்றா கூறுகிறீர் என்றான். நீதிபதி மேஜையைத் தட்டிக் கண்டிப்பான குரலில் வாலிபனே நான் உன்னை அறியேன். உன் பெயர் என்ன? உன் விலாசம் என்ன என்று வினவினார். இந்த வார்த்தைகளினால், தான் அவனை அறியவேயில்லை என்று அவர் பொருள் கொள்ளவில்லை. தன் குடும்பத்திலும், வீட்டிலும் அவர் அவனை அறிந்திருந்தார். ஆனால் இந்த இடத்தில், இந்தச் சந்தர்ப்பத்தில் அவன் யாரென்று அவருக்குத் தெரியாது. இப்பொழுதும் அவன் தன் தகப்பனுடைய குமாரனேயாயினும், அவன் நியாயாசன முறையின்படி எல்லாம் நடந்து, தான் செலுத்தவேண்டிய அபராதங்களைச் செலுத்தித் தீர்க்கவேண்டியவனே.

பத்துக் கன்னிகைகளும் தங்கள் தீவட்டிகளில் எண்ணெய் வைத்திருந்தார்கள். புத்தியற்றவர்களை வித்தியாசப்படுத்தினது எதுவென்றால், அவர்கள் தங்கள்

பாத்திரங்களில் கூடுதலான எண்ணெயை வைத்திராததே. சிலர் உண்மைக் கிறிஸ்தவர்களாகக் கிறிஸ்துவின் ஜீவனையும், மற்றவர்களுக்குமுன் சாட்சியையும் உடையவர்களாயிருக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய சாட்சி தொடர்ந்து வளருகிறதாயில்லை. ஏனெனில், அன்றாடத் தேவையை பூர்த்தி செய்யக்கூடியதாக அவர்கள் ஜீவியம் அமையவில்லை. அவர்கள் ஆவியைப் பெற்றிருக்கிறவர்களேயாயினும், அவர்கள் ஆவியினால் நிறைந்து இருக்கவில்லை. நெருக்கடியான காலத்தில், அவர்கள் விற்கிறவர்களிடத்திற்குச் செல்லவேண்டியிருக்கிறது. உவமையின் இறுதியிலே பத்துப் பேரும் போதுமான எண்ணெய் உடையவர்களாயிருந்தார்கள். ஆனால் அவர்களுக்குள் வித்தியாசம் எதுவென்றால், புத்தியுள்ளவர்கள் தேவையுள்ள நேரத்தில் போதுமானதை உடையவர்களாயிருக்க, புத்தியற்றவர்களோ முடிவிலே போதுமானதை உடையவர்களாயிருந்தும், அதைப் பெற்றிருப்பதின் உண்மை இலக்கை இழந்தவர்களானார்கள். கால அளவே இதில் அடங்கிய காரியம். இதையே தம் சீஷர்களுக்கு ஆண்டவர் வலியுறுத்த விரும்பினார். ஏனெனில் அவர்களைச் சாதாரணமானவர்களாய் அல்ல, விழித்திருக்கிறவர்களாகவே இருக்கும்படி உவமையின் முடிவில் ஏவினார்.

துன்மார்க்கத்திற்கு ஏதவான மதுபானக வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து இருங்கள் (5:18). இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுவதைப்பற்றியோ, அல்லது தம் ஊழியக்காரார் ஆவியின் வரங்களைப் பெறும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் இறங்குவதைப்பற்றியோ மத்தேயு 25ல் சொல்லப்படவில்லை. பாத்திரத்தில் கூடுதலாக இருக்கிற எண்ணெயைப்பற்றியே ஒளிவீசுவதற்கான ஆதாரம் காக்கப்படுவதைப்பற்றியே காத்திருக்கும் நேரம் எவ்வளவு அதிகமானதாயிருப்பினும் அதிசயவிதமாய் நமக்குள் தொடர்ந்து ஊற்றப்படும் ஆவியைப் பற்றியே, இங்கு சொல்லப்பட்டிருக்கிறது (உவமையில் தீவட்டி, பாத்திரம் என்று வெவ்வேறாகக் கூறியிருக்க, உள்ளபடி நாமே தீவட்டியாகவும், நாமே பாத்திரமாகவும் இருக்கிறோம்). இந்த உள்ளான நிறைவை அறியாதபடி எந்தக் கிறிஸ்தவன் மோட்சத்தில் நித்தியத்தைக் கழிக்க இயலும்? ஒரு கன்னிகையும் இதை தவிர்க்க முடியாதே! ஆகையால், நமது ஆண்டவர், இந்த நிறைவைப்பற்றிய அறிவை நாம் இப்பொழுதே அறிந்துகொள்ளும்படி பிரயாசப்படுகிறார். நாளையாவது நாழிகையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

நிறைந்து இருங்கள் என்று பரிசுத்த ஆவியைக் குறித்து இங்கு சொல்லப்பட்டிருக்கும் பதம் நாம் சாதாரணமாய் உபயோகிக்கிற ஒரு சொல் அல்ல. எப்பொழுதும் நிறைவுள்ளவர்களாகவே இருக்க உங்களை ஒப்புக்கொடுங்கள் என்பதே இதன் அர்த்தம். பெந்தெகொஸ்தே நாளிலுள்ளதுபோல இது ஓர் அனுபவத்தின் சிகரமல்ல. இது நாம் எந்த நேரமும்

இருக்கவேண்டிய ஓருநிலை. இது வெளிப்பிரகாரமான ஒரு காரியமாயிருக்கிறது. ஆவியின் வரங்களுக்குச் சம்பந்தப்பட்டதாயும் வெளியரங்கமான தோற்றங்களாயும் அது இருக்கிறதில்லை. இது நம் ஆத்துமாவினுள் பரிசுத்த ஆவியானவருடைய கிரியையாயும், அவர் தம் பிரசன்னமாகுதலாகவும் இருந்து, நம் பாத்திரத்திலிருக்கிற வெளிச்சம் மங்காமல், அவசியமானால் நள்ளிரவுக்குப் பின்னும் எரியும் என்பதின் உறுதியாகவும் இருக்கிறது.

இன்னும் பார்க்கப்போனால், இது முழுவதும் ஒருவருக்கே உரிய காரியமுமல்ல, அடுத்த வசனம் (5:19) தெளிவாக்குகிறர்போல, இது மற்ற கிறிஸ்தவர்களோடுகூட, ஒருவரையொருவர் தாங்கினவர்களாய்ப், பகிர்ந்துகொள்ளுகிற ஒரு காரியம். ஏனெனில், ஆவியினால் நிறைந்து இருங்கள் என்பது அந்த வசனத்தின்படி பார்ப்போமானால், உங்கள் இருதயத்தில் கர்த்தரைப்பாடிக்கீர்த்தனம் பண்ணி, என்பதாக மட்டும் இல்லாமல், சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு இருங்கள் என்பதாகவும், இருக்கிறது. நம்மில் சிலருக்குத் தனியாகப் பாடுவதென்பது மிகவும் சுலபமான காரியம். ஆனால் இரண்டு பேராவது, நான்கு பேராவது, தாளத்தோடும் இராகம் பிசகாமலும் பாடுவதென்பதோ அப்படியல்ல, ஆவியில் ஏகசிந்தையாயிருக்கவேண்டும் என்பதே எபேசியர் நிருபத்தின் இரண்டாம் பகுதிக்கு மையப் பொருளாக அமைந்திருக்கிற செய்தியாம் (4,3,15,16 வசனங்களைப் பார்க்க). சிங்காசனத்திற்கு முன்பாக நாமெல்லாரும் ஒருவரோடொருவர் சேர்ந்து புதுப்பாட்டைப் பாடும்படியாகவே ஆவியின் நிறைவு நமக்கு அருளப்பட்டிருக்கிறது (வெளி 14:3).

நீ புத்தியுள்ளவனானால், சீக்கிரத்தில் இந்த நிறைவைத் தேடுவாய். புத்தியற்றவனாயிருந்தால் அதைக் கடத்திப் போடுவாய். புத்தியின்மையோ அல்லது ஞானமோ இந்த ஒரு காரியத்தையே சார்ந்திருக்கிறதென்று நான் மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன். நம்மில் சிலர் பிள்ளைகளையுடைய பெற்றோராயிருக்கிறோம். குணாதிசயங்களில் இந்தப் பிள்ளைகள் எவ்வளவு வேறுபட்டவர்களாயிருக்கிறார்கள்! ஒன்று உடனடியாகக் கீழ்ப்படியும், மற்றதோ, காலம் கடத்துகிறதினால் கீழ்ப்படிதலைத் தவிர்த்திட முடியம் என்று நினைக்கும். நீங்கள் இளக்காரமாயிருந்து கட்டளைகளை மீறுகிறதற்கு இடங்கொடுக்கிறவர்களாயிருந்தால், கீழ்ப்படிதலைத் தள்ளிப்போட நினைத்த பிள்ளையே ஞானவான். ஏனெனில் ஒன்றும் செய்யாதிருந்து முடிவில் வெற்றிபெறுகிறவன் அவனே. ஆனால், நீங்கள் உங்கள் வார்த்தைகளில் கண்டிப்பாய் இருந்து, உங்கள் கட்டளைகள் மீற முடியாதபடி எப்படியாகிலும் முடிவில் கீழ்ப்படியும்படியாகவே இருந்ததானால், அந்தக் கட்டத்தை

உடனடியாகத் தாண்டும்படி தைரியமாய்ப் பிரயாசப்படுகிற பிள்ளையே ஞானவான்.

தேவனுடைய சித்தத்தைக் குறித்துத் தெளிவுள்ளவர்களாயிருங்கள். தேவனுடைய வார்த்தைகள் தள்ளிவிடக் கூடியவைகளானால் அவைகளினின்று, நாம் மீள முயல்வது புத்தியற்ற காரியமாய்க் காணப்படாது. ஆனால், தேவன் மாறாத சித்தமுடையவராய் மாறாத தெய்வமாக இருப்பாரேயாகில் நீங்கள் ஞானவான்களாயிருக்கப் பாருங்கள். காலத்தை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்பட (3:19) பாத்திரத்திலுள்ள கூடுதலான எண்ணெயையே நாடி, அதையே பற்றிக்கொள்ளுங்கள்.

நம்முடைய கேள்விகள் எல்லாவற்றிற்கும், இந்த உவமை பதில் அளிக்கிறதில்லை. புத்தியற்றவர்கள் எவ்விதம் எண்ணெய் கொண்டார்கள்? இது நமக்குச் சொல்லப்படவில்லை. தம்முடைய பிள்ளைகள் முடிவில் நிறைவுள்ளவர்களாயிருக்கும்படி தேவன் கையாளும் உபாயங்கள் இங்கு சொல்லப்படவில்லை. அது நம்முடைய காரியம் அல்ல. நம்முடைய நோக்கம் முதற்பலனைப் பற்றியதேயாகும். நாம் முன்னேறும்படியாகவும், தொடரும்படியாகவும் ஏவப்படுகிறோம். அவ்வாறு முன்னேறாவிட்டால், சம்பவிக்கக் கூடியவை எவை என்று அறிய முயல்வது நமக்கடுத்ததல்ல.

நீ இந்தக் காயரியத்தைக் குறித்து சிரத்தை அற்றவனாயிருக்கிறதினால், நிறைவைத் தவிர்க்கவோ, அல்லது இதற்கான கிரயத்தை செலுத்தாதிருக்கவோ வேண்டியதில்லை என்று நினையாதே. ஞானத்துக்கும் அது காணப்படவேண்டிய காலத்துக்கும் சம்பந்தம் உண்டு. புத்தியுள்ளவர்கள் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுகிறார்கள். என்னுடைய பேனா மையால் நிறைந்து இப்பொழுது எழுதுவதற்கு ஆயத்தமாயிருக்கிறதுபோல, புத்தியுள்ளவர்கள், ஆண்டவருடனே இசைந்து, அவர் விரும்புகிறபடி எந்த நேரத் தேவைக்கும் ஆயத்தமாயிருக்கிற பிரயோஜனமாக ஆயதங்களாக அமைந்து தேவனைத் திருப்தியாக்குகிறார்கள்.

அப்போஸ்தலனான பவுலைப் பாருங்கள். அவர் பற்றி எரியும் ஆத்தும பாரமுடையவராய் இருக்கிறார். நமக்கான கர்த்தருடைய திட்டம் காலங்கள் நிறைவேறுதலோடு பிணைக்கப்பட்டிருக்கிறதைக் காண்கிறார். (1:9). வருங்காலங்களில் விளங்கும்படியான இரட்சிப்பிலே தரித்திருந்து கிறிஸ்துவின்மேல் பின்னே நம்பிக்கையாயிருந்தவர்களுள் ஒருவராயிருக்கிறார் (1:11, 2:26). இவைகள் எல்லாவற்றையும் மனதில் கொண்டவராய் அவர் செய்கிறதென்ன? அவர் நடக்கிறார். அவர் நடக்கிறதுமட்டுமல்ல, ஓடவும்

செய்கிறார். ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன் (1.கொரி.9:26). கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் என்கிறார் (பிலி.3:14). ஆவிக்குரிய காரியங்களின் இரகசியங்களைத் தெரிந்து கொண்டு ஆண்டவருடனேகூட நடக்க சிலர் ஆரம்பிக்கிறதை நான் காணும்போது ஆ, இதை அவர்கள் ஐந்து ஆண்டுகளுக்குமுன்பு கண்டிருந்தார்களேயானால்! என்று என் இருதயத்தில் நினைக்கிறதுமுண்டு. நாம் நடந்து கொண்டு இருக்கிறவர்களாயிருக்கலாம். ஆயினும் காலம் குறுகியதாயிருக்கிறது. கால ஆதாயமே இப்போதைய அவசியமான தேவை. அதனால் நாம் என்னத்தைப் பெறுகிறோம் என்பது காரியமல்ல. ஆண்டவருக்கு இப்பொழுது வேண்டியது என்ன என்பதே காரியம். எந்தச் சமயத்தில் உபயோகப்படுத்தக்கூடிய ஆயுதங்களே ஆண்டவரின் தேவை. ஏன்? நாட்கள் பொல்லாதவைகளாயிருப்பதால் இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தின் தேவைகள் என்னைத் திடுக்கிடச் செய்ய ஏதுவாயிருக்கின்றன. இதைப் பார்க்கும்படியான கண்கள் நமக்கு வேண்டுமே.

நம்முடைய ஆண்டவர் நம்மைக் கரிசனையின்றி பலவந்தமாய் நடத்தவேண்டிய அவசியம் ஏற்படலாம். நான் அகாலப் பிறவி போன்றவன் என்று பவுல் தன்னைக் குறித்துச் சொல்லவேண்டியதாயிருந்தது. இப்போதுள்ள நிலைக்கு வர, அவர் அநேகவிதமான கஷ்டங்களையும் கடக்கவேண்டியிருந்தும், அவர் தொடர்ந்து போய்க்கொண்டேயிருக்கிறார். இது எப்பொழுதும் கால அளவைக் குறித்தான ஒரு காரியமே. ஒருவேளை கொஞ்சகாலத்துக்குள், சீக்கிரமாய், தேவன் நமக்குள் கிரியை நடப்பிக்கவேண்டும். எப்படியாகிலும் அந்த அளவு நமக்குள் நடைபெறவேண்டியிருக்கிறது. நம்மை அழைத்ததினால் நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னது (1:18) என்பதை அறிந்துகொள்ளும்படியாக நம் மனக்கண்கள் பிரகாசிக்கப்பட்டு, கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்து (5:17) கொண்டவர்களாக நாம் தொடர்ந்து நடப்போமாக. இல்லை, ஓடிப் பிடிப்போமாக. விடாப்பிடியாயிருக்கிற ஆத்துமாக்களைக் கர்த்தர் எப்பொழுதும் நேசிக்கிறார்.

## நில்

கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்...... ஆகையால், தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை

எடுத்துக்கொள்ளுங்கள்...... கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்...... மார்க்கவசத்தை தரித்தவர்களாயும்..... பாதரட்சையைக் கால்களில் தொடுத்தவர்களாயும் நில்லுங்கள்...... தலைச்சீராவையும்.... பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்..... ஜெபம் பண்ணி..... விழித்துக்கொண்டிருங்கள் (எபேசி.6:10,11,13-18).

கிறிஸ்தவ அனுபவம் உட்காருவதில் ஆரம்பித்து, நடப்பதிலே தொடருகிறது. ஆனால் நடப்பதில் முற்றுப்பெறுவதில்லை. கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் நிற்பதற்கும் கற்றுக் கொள்ளவேண்டும். நாம் எல்லாரும் எதிர்த்துப் போராடவும் ஆயத்தமாயிருக்கவேண்டும். நாம் உன்னதங்களில் கிறிஸ்துவுடனேகூட உட்காரவும் அவருடைய தகுதிக்கேற்றபடி இந்த உலகில் நடக்கவும் அறிந்திருக்கிறதுமட்டுமல்லாமல், எதிரியோடு எதிர்த்துநிற்கவும் தெரிந்திருக்கவேண்டும். இந்தப் போராட்டத்துக்கடுத்த காரியங்களைப்பற்றி, இப்பொழுது நாம் பார்க்கப்போகும் மூன்றாம் பகுதியிலே (6:10-20) சொல்லியிருக்கிறது. அதையே பவுலும் பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்று கூறுகிறார்.

முதலில் இவைகளை எபேசியர் நிருபம் நமக்குமுன் வைக்கும் கிரமத்தை முறைபடியும் ஞாபகப்படுத்திக்கொள்ளுவோமாக. அதாவது உட்காரு, நட, நில் என்பதே. ஏனெனில் கிறிஸ்துவிலும் அவர் செய்து முடித்திருக்கிறவைகளிலும் முற்றுமாய் சார்ந்து, பின் உள்ளான மனிதனில் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்திருந்து, இவ்வுலகில் அனுபவபூர்வமான பரிசுத்த ஜீவியத்தை நடத்தி அவரைப் பின்தொடராத கிறிஸ்தவன் எவனும் இந்தப் போராட்டத்திற்குள் பிரவேசிக்கும்படி நினைப்பது முடியாத காரியமே. இவைகள் ஏதாவதொன்றில் அவன் குறைவுள்ளவனாக இருந்தால், அவன் போராட்டத்தில் ஒரு பொருளெனக் கருதப்படான். சாத்தான் அவனைச் சட்டை செய்யவேண்டியதில்லை.

ஆனால் அவன் கர்த்தரிலும் அவர் சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவதற்கு கிறிஸ்து உன்னதங்களிலே உயர்த்தப்பட்டதின் மேன்மையையும், பிறகு அவர் நம்மில் வாசம்பண்ணும் இரகசியத்தையும் அறிந்துகொள்ளவேண்டும் (6:10 வசனத்துடன் 1:19யும் 3:16யும் ஒப்பிடுக). இந்த இரண்டு சத்தியங்களைப் பூரணமாகவும் தெளிவாகவும் கற்றறிந்த பிறகே நில் என்ற பதத்தில் அடங்கியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையின் மூன்றாம்படியை அவன் தெரிந்துகொள்ள ஏதுவாகும்.

தன்னுடைய ஆளுகைக்குள்ளடங்கிய எண்ணற்ற பிசாசுகளையும், வீழ்ந்துபோன தூதர்களையும் உடைய பிரதான விரோதி தேவனுக்கு உணடு. இவைகள்

உலகத்தை பொல்லாப்பினால் நிறைத்து, அதிலிருந்து தேவனைத் தள்ளும்படி முயற்சிக்கின்றன. 12ம் வசனத்தின் பொருள் இதுவே. அது நம்மைச் சுற்றி நடைபெற்று வருகிற காரியங்களின் விமர்சனம். நமக்கு விரோதமாகவும் மாம்சமும் இரத்தமும் எழும்புகிறதை அதாவது இராஜாக்கள், அதிபதிகள், பாவிகள், பொல்லாதவர்களடங்கிய உலக சமுதாயம் எழும்புகிறதை மட்டும் நாம் பார்க்கிறோம். துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப் பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்கு போராட்டம் உண்டு என்று கூறுகிறார். சுருங்கச் சொன்னால், சாத்தானுடைய தந்திரங்களுடனே நமக்குப் போராட்டமுண்டு. இரண்டு சிங்காசனங்கள் யுத்தத்தில் இறங்குகின்றன. தேவன் இந்தப் பூமியைத் தம்முடைய ஆளுகைக்குரியதென்கிறார். சாத்தானோ அவருடைய அதிகாரத்தைக் கவிழ்த்துப்போட முற்படுகிறான். இப்பொழுது சாத்தான் தன் வசப்படுத்திய இராஜ்யத்திலிருந்து அவனை அகற்றி, எல்லாவற்றிற்கும் கிறிஸ்துவையே தலையாக்கும்படியாக சபை அழைக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து நாம் செய்கிறதென்ன?

முதலில், பொதுவாகத் தனி கிறிஸ்தவனின் ஜீவியத்துக்கடுத்த போராட்டங்களைக் குறித்தும், பின்பு குறிப்பாக, நம்மிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய ஊழியத்திற்கடுத்த போராட்டங்களைக் குறித்தும் பார்ப்போம். தேவனுடைய நியாயங்களை மீறுகிறதினால் நமக்கு உண்டாகும் கஷ்டங்களைப் பிசாசினுடைய தாக்குதல்கள் என்று நாம் சொல்லக்கூடாது. அப்படிப்பட்டவைகளை எப்படிச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதை இதற்குள்ளாக அறிந்துகொண்டிருக்கவேண்டும். ஆனால் பரிசுத்தவான்களின்மீது மாம்சத்துக்கடுத்த தாக்குதல்களை அவர்கள் சரீரத்திலும் மனதிலும் சாத்தான் கொண்டுவரும் அநேக தாக்குதல்களை நாம் இலேசாக விட்டுவிடுகிறதில்லை. அதோடுகூட, நம்முடைய ஆத்மீக ஜீவியத்தில், விரோதியானவன் கொண்டுவரும் தாக்குதல்களைப்பற்றி நாம் யாவரும் அறிவோமாமே. இவைகளை நாம் எதிர்க்காமலே விட்டுவிடுவோமோ?

நம்முடைய வாழ்க்கை, ஆண்டவரோடுகூட உன்னதங்களிலே இருக்கிறது. இவ்வுலகத்திலும் நாம் அவரோடுகூட நடக்கவேண்டிய விதத்தைக் கற்றுக்கொண்டு வருகிறோம். ஆனால், நமக்கும் தேவனுக்கும் எதிராளியாயிருக்கிறவனுக்கும் முன்பாக நாம் எப்படி இருக்கவேண்டும்? இதற்கு நில் என்பதே கர்த்தருயைட வார்த்தை. நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்திராணியுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைத் தரித்துக்கொள்ளுங்கள். இந்த வசனத்தில் வரும் நில் என்ற வினைச்சொல்லும் அதனோடு சேர்ந்துவரும் எதிர்த்து என்ற இடைச்சொல்லும், மூலபாஷையாகிய கிரேக்க மொழியில் உன் ஸ்தானத்தில்

தரித்திரு என்று பொருள் கொள்ளும்படியாகவேயிருக்கிறது. தேவனுடைய இந்தக் கட்டளையில் ஓர் உன்னத சத்தியம் அடங்கியிருக்கிறது. அதாவது விரோதியானவன் போராடித் தாக்குகிற ஸ்தானம் உண்மையில் தேவனுடையதே. அவருடையதேயானால் அது நம்முடையதுமாகும். அப்படியில்லையென்றால் அதை நம்முடையதாக்கிக் கொள்ளும்படி நாம் போராடி ஜெயிக்கவேண்டியிருக்கும்.

எபேசியர் நிருபத்தில் விவரிக்கப்பட்டுள்ள போராயுதங்கள் எல்லாம் பாதுக்காப்புக்குரியவைகளே. பட்டயமும்கூட பாதுகாப்புக்குரியதாகவும், தாக்குதற்குரியதாகவும், உபயோகிக்கப்படலாம். பாதுகாத்தல், தாக்குதல் என்பவைகளில் வித்தியாசமுண்டு. பாதுகாத்தல் என்பது, நான் வெற்றிபெற்றவன் என்றும், அந்த வெற்றியைக் காத்துக்கொள்ளுவதே நான் செய்யவேண்டியது என்றும் பொருள்படும். ஆனால் தாக்குதல் என்றால், எனக்கு உரிமையானதொன்றும் இல்லாதிருக்க, அதை சொந்தமாக்கிக்கொள்ளும்படி நான் போராடவேண்டும் என்பதைக் குறிக்கும். இவைகளுள்ள பேதமேதான், ஆண்டவராகிய இயேசு இறங்கின போராட்டத்திற்கும், நாம் இறங்குகிற போராட்டத்திற்கும் உள்ள வித்தியாசமாகும். தாக்குதல் அவருடையது. நம்முடையதோ, உண்மையில் பாதுகாத்தலாம். நமதாண்டவர் வெற்றி பெறும்படியாகவே சாத்தானோடு எதிர்த்துப்போராடினார். அவர் ஏற்கெனவே சம்பாதித்து முடித்த அந்த வெற்றியில் நிலைகொண்டிருக்கவும், அதை உறுதிப்படுத்திக்கொள்ளவுமே, நாம் அவனுடன் போராடுகிறோம். உயிர்த்தெழுதலின் காரணமாய், அந்தகாரலோகாதிபத்தியம் முழுமைக்கும் தம்முடைய குமாரனை தேவன் வெற்றிவேந்தராக்கி, அவர் வென்ற அந்த வெற்றியைத் தேவன் நமக்குத் தந்தருளியிருக்கிறார். அதைப் பெற்றுக்கொள்ளும்படியாக நாம் இனிப் போராடவேண்டியதில்லை. நமக்கு விரோதிகளாய், எதிர்த்து நிற்கிறவர்களுக்கு முன்பாக, அதைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டியது. இப்படியாக நாம் நாம் வெற்றிபெறும் பொருட்டு இன்று போராடுகிறதில்லை. நம் யுத்தமோ, வெற்றியின் காரணமாய் வருகிறதாகும். ஜெயம்கொள்ளும்படி நாம் போராடுகிறதில்லை. கிறிஸ்துவில் எற்கெனவே வெற்றி பெற்றவர்களானபடியினாலே, நாம் அப்படிச் செய்கிறோம்.

வெற்றி பெறும்படி நீ போராட்டத்தில் இறங்குவாயானால், ஆரம்பத்திலேயே நீ தோல்வி அடைந்தாய். உன் வீட்டிலோ அல்லது உன் உத்தியோக ஸ்தலத்திலோ, விரோதியாகிய சாத்தான் உன்னைத் தாக்க முற்படுவதாகக் கொள்ளுவோம். உன்னால் ஒருபோதும் மேற்கொள்ளக்கூடாத சூழ்நிலையை உண்டாக்குகிறான். நீ செய்வது என்ன? நன்றாய்ப் போராடும்படி உன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு, பின் அப்போராட்டத்தில் வெற்றியைத் தரும்படி ஜெபிக்கும்படியாகவே நீ முதலில் ஏவப்படுகிறாய். நீ இதைச் செய்வாயானால்

உனக்குத் தோல்வி நிச்சயம். ஏனெனில் கிறிஸ்துவில் உனக்குள் உன் ஸ்தானத்தை நீ இழந்துவிடுவாய். நீ எடுத்துக்கொண்ட நடவடிக்கையின்மூலமாய் உன் ஸ்தானத்தை எதிராளி வசம் விட்டுக்கொடுத்தாயே! அப்படியானால், நீ செய்யவேண்டியதுதான் என்ன? உன் கண்களை ஏறெடுத்து, ஆண்டவரைப் பார்த்துத் துதிக்கவேண்டியதே, ஆண்டவரே, எதிர்த்துப் போராடக்கூடாத சந்தர்ப்பத்திற்குமுன் நான் கொண்டுவரப்பட்டிருக்கிறேன். உம்முடைய விரோதியாகிய சாத்தான், என்னுடன் வீழச்சியைக் காணும்படியாகவே இதை என் முன் வைத்திருக்கிறான். ஆயினும் நீர் வென்ற வெற்றி எல்லா வெற்றிகளிலும் மேம்பட்டதாயிருப்பதால், நான் உம்மைத் துதிக்கிறேன். உம்முடைய வெற்றி இந்தக் காரியத்திலும் பூரண வெற்றிபெற்றவனாகவே நான் இருக்கிறபடியால் உம்மைத் துதிக்கிறேன்.

நம்மைப் பாவத்தில் வீழ்த்துவது, சாத்தானின் முதல் கருத்தல்ல. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நம்மைக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் தம்முடைய வெற்றியுள்ள ஸ்தானத்திலிருந்து நம்மைத் தள்ளிவிடுகிறதினால் நாம் எளிதாய்ப் பாவத்தில் விழும்படி செய்வதே அவனுடைய பிரயாசம். நாம் கிறிஸ்துவுடன் உட்கார்ந்ததானால் உண்டாயிருக்கிற இளைப்பாறுதலையும், ஆவியிலே நடத்தும் ஜீவியத்தையும், நம் சிந்தனையின்மூலமாகவோ அல்லது இருதயத்தின்மூலமாகவோ, நம் புத்தியின்மூலமாகவோ அல்லது உணர்ச்சிகளின்மூலமாகவோ தாக்குவதே அவன் வேலை. ஆனால் அவன் தாக்கும் முறை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தற்காப்பு ஆயுதம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தலைச்சீரா, மார்க்கவசம், கச்சை, பாதரட்சை, இவைகளெல்லாவற்றிற்கும் மேலாக பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாக, விசுவாசமென்னும் கேடகமும் உள்ளது. விசுவாசமானது கிறிஸ்துமேலானவராக உயர்ந்திருக்கிறார் என்றும் விசுவாசமானது நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம் என்றும், விசுவாசமானது நாம் தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவராலே பெற்றோம் என்றும், விசுவாசமானது கிறிஸ்து நம்முடைய இருதயத்தில் அவருடைய ஆவியினாலே வாசமாய் இருக்கிறார் என்றும் கூறியே பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை எல்லாம் அவித்துப்போடுகிறது (1:20, 2:8, 3:12,17).

வெற்றி கர்த்தருடையதாகையால் அது நம்முடையதும் ஆகும். வெற்றி அடையும்படி முயற்சி செய்யாமல், அதைக் காத்துக்கொள்ளுகிறதில் மட்டும் தரித்திருப்போமானால், விரோதி முற்றிலும் முறியடிக்கப்படுவதைக் காண்போம். விரோதியை நாம் மேற்கொள்ளும்படியான பலத்தை ஆண்டவரிடம் கேளாமலும் அல்லது அவர் மேற்கொள்ளும்படி அவரை நோக்கிப் பாராமலும் முன்னதாகவே அவர் அவனை மேற்கொண்டுவிட்டபடியால் அவர் வெற்றி சிறந்தவராதலால்

துதித்தலே நாம் செய்யவேண்டியது. கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசமே காரியம்.

இத்துடன் இவைகள் முடிவடைகிறதில்லை. எபேசியர் 6ம் அதிகாரத்தில் தனிப்பட்டவனுடைய போராட்டத்தைக் குறித்து மட்டும் சொல்லப்படவில்லை. கர்த்தருடைய ஊழியத்திற்கடுத்த போராட்டத்தைக் குறித்தும் அதில் எழுதயிருக்கிறது. சுவிசேஷத்தின் மகா இரகசியத்தை அறிவிக்கிறதான இந்த ஊழியத்தைக் குறித்துப் பவுல் 3:1-13ல் விரிவாக எழுதியிருக்கிறார். இதன் பொருட்டே தேவ வசனமாகிய ஆவியின் பட்டயமும், அதனோடே ஜெபம் என்ற ஆயுதமும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். எந்தச் சமயத்திலும் வேண்டுதலோடும் விண்ணபத்தோடும் ஆவியினாலே ஜெபம்பணணி அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடு சகல பரிசுத்தவான்களுக்காகவும்பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாதிபதியாகிய நான் அதைப்பற்றி பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள் (7:17-20).

கர்த்தருடைய ஊழியத்தின் சம்பந்தமாய் நமக்குள் இந்தப் போராட்டத்தைக் குறித்து இன்னுமொரு காரியத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன். ஏனெனில் இதில் நாம் சில இடஞ்சல்களைச் சந்திக்க ஏதுவாகலாம். ஆண்டவராகிய இயேசு எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் இம்மையில் மாத்திரமல்ல, மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் உயர்ந்திருக்கத்தக்கதாக (1:20) வீற்றிருக்கிறதும், எல்லாம் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒருவகையில் உண்மையே. இப்படிப்பட்ட இந்த முடிவு பெற்ற வெற்றியினிமித்தமாகவே நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்க (5:20) வேண்டியவர்களாயிருக்கிறோம். ஆயினும் ஒரு வகையில் பார்ப்போமானால், சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கிறதை நாம் இன்னும் காணாதிருக்கிறதை ஒத்துக்கொள்ள வேண்டியதாகவே இருக்கிறது. பவுல் கூறும் வண்ணமாகவே, வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் இவ்வுலகத்தனங்களுக்குப் பின்னாக மறைந்து நிற்கிற பொல்லாத தீய அதிகாரங்களும், கிறிஸ்துவுக்கே உரியதான ஆளுகைகளை மேற்கொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். நாம் இதைப் பாதுகாப்புக்கான

போராட்டம் என்று சொல்லுகிறது சரியானதா? தப்பான எண்ணமுடையவர்களாய் நாம் இருக்கக்கூடாது. சாத்தானுக்குரியதாக வெளியரங்கமாய்க் காணப்படுகிறவைகளை நம்முடையவைகளாகப் பாவித்து, அதை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் பிடித்துக்கொண்டிருப்பது எப்பொழுது நியாயமாய்க் காணப்படும்?

இவ்விஷயத்தில் நமக்கு உதவியளிக்கும்படியாக நாம் தேவவசனத்தை எடுத்துக்கொள்ளுவோம். இயேசுவின் நாமத்தில் ஏறெடுக்கும் ஜெபத்தையும் குறித்து வசனம் சொல்லுகிறதென்ன? கீழ்க்கண்ட வேத வசனங்களைப் பார்ப்போம்.

பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அல்லாமலும், உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும், பூமியில் ஒருமனப்பட்டிருந்தால்,.... அது உங்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்திலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே, அவர்கள் நடுவிலே இருக்கிறேன் (மத்.18:18-20).

பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து, ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் கீழ்ப்படிகிறது என்றார்கள் (லூக்.10:17). அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றும் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே, பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ, அதை அவர் உங்களுக்குத் தருவார். இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை. கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள் (யோ.16:23-24).

நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொன்னான் (அப்.3:6).

பவுல்.... திரும்பிப் பார்த்து, நீ இவனைவிட்டுப் புறம்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று, அந்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று (அப்.16:18).

மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.... பொல்லாத ஆவி அவர்களை நோக்கி இயேசுவையும் அறிவேன், பவுலையும் அறிவேன். நீங்கள் யார் என்று சொல்லிற்று (அப்.19:13,15).

முதலாவதாக, அலங்கார வாசலண்டையில் இருந்த சப்பாணியைக் குணமாக்கும் பேதுருவின் செய்கையைக் கவனிப்போம். அவன் முழங்கால்படியிட்டு ஜெபித்துக் கர்த்துருடைய சித்தத்தை முதலவாது கேட்கவில்லை. உடனே எழுந்து நட என்று கட்டளையிட்டான். பிலிப்பி பட்டணத்தில் பவுல் செய்தது இவ்விதமானதே. அவன் கட்டளையிட அந்தப் பொல்லாத ஆவி, அந்நேரமே புறப்பட்டுப்போயிற்று. இது என்ன? தேவன் தமது திவ்விய அதிகாரம் மனிதனிடம் வைத்திருக்கிறார் என்பதற்கு இது ஓர் உதாரணம் என்று நான் சொல்லுவேன். தம்முடைய ஊழியக்காரர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் செயல்படும்போது, அவர்கள்மூலமாய் கிரியை நடப்பிக்க அவர் தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார். அவர்கள் தாங்களாகச் செய்கிறது என்ன? அவர்கள் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை என்பது வெளிப்படை. கிறிஸ்துவின் நாமத்தை அவர்கள் உபயோகிக்கிறார்கள். வேறு எந்த நாமத்தையோ, அல்லது தங்களுடைய நாமத்தையோ, மற்ற அப்போஸ்தலருடைய நாமத்தையோ உபயோகிப்பதால் இந்தப் பலனைக் கொடுப்பதில்லை என்பதும் வெளிப்படை. ஆண்டவராகிய இயேசுவின் நாம வல்லமையே இந்த விதமான விளைவுகளை உண்டுபண்ணினது. அந்த நாமத்தை உபயோகிக்கும் அதிகாரம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதில் தேவன் தமது அதிகாரத்தை வெளிப்படுத்தாதிருக்கிறாரோ, அது கர்த்தருடைய ஊழியம் என்று அழைக்கும் தகுதியைப் பெறாது. அவருடைய நாமத்தைப் பிரயோகிக்கும்படியான அதிகாரம் பெற்றிருத்தலே காரியம். நாம் எதிர்த்து நின்று, அவர் நாமத்தில் பேசும்படியான திராணியுடையவர்களாயிருக்கவேண்டும். அப்படியில்லையென்றால் நம்முடைய ஊழியத்தின் ஆவியின் அச்சாரம் காணப்படாது. இது அந்த, நேரத்தில் நாம் சாதித்துச் சரிப்படுத்திக்கொள்ளக்கூடிய ஒரு காரியம் அல்ல என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்தட்டும். இது தேவனுக்குக் கீழ்ப்படிகிறதலுண்டாகும் கனி. நாம் அறிந்தும், அனுபவிக்கிறதுமான நம்முடைய ஆவிக்குரிய நிலையின் பலன். தேவையான நேரத்தில் நாம் உபயோகிக்க ஆயத்தமாயிருக்கும்படி, இது முன்னதாகவே ஆயத்தமாய்ப் பெற்றிருக்கவேண்டியது.

இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன். தேவனுக்கு ஸ்தோத்திரம். பொல்லாத ஆவிகள் குமாரனை அறிந்திருக்கின்றன. இதற்குச் சுவிசேஷங்களில் அநேக சான்றுகள் இருக்கின்றன. சாத்தான் பயந்து நடுங்கும்படியாகக் குமாரனோடு ஒருமைப்பாடுள்ள மற்ற அநேகரும் உண்டு. பாதாளத்தில்

அவர்களைக் குறித்து நடுக்கமுண்டு. இவ்வண்ணமாகத் தமது வல்லமையைத் தேவன் உனக்கு ஒப்படைப்பாரா என்பதே கேள்வி. இது முதலில் தீர்மானமாகவேண்டும். அதன் பிறகே, இவர் நாமத்தை நாம் எளிதாக உபயோகிக்க ஏதுவாகும். அப்பொழுதே பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ, அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும். அவர் நமக்குத் தமது அதிகாரத்தை ஒப்புக்கொடுத்திருக்கிறதின் நிச்சயமே, நாம் அவருடைய உண்மையான ஸ்தானாதிபதிகளாய் இவ்வுலகில் உலாவக் காரணமாகும். அது நாம் அவரோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தின் விளைவாகும்.

இவ்விதமாக நாம் செய்யும் வேளைகளில் அவர் தம்மை வெளிப்படுத்தும்படி நாம் ஆண்டவரோடு அப்படிப்பட்ட ஐக்கியமுடையவர்களாக இருக்கிறோமா? தேவனுடைய வாக்குத்தததத்தங்களை மட்டும் நம்பிச் சார்ந்து காரியத்தில் முன்னேறுவது அநேகம் முறை அபாயகரமாய்த் தோன்றுகிறது. காரியம் என்னவெனில் தேவன் நம்மைக் கைவிடாதிருப்பாரா? அவர் தம் சித்தப்படி செய்யும் வேலைக்கு மட்டும் வெளிப்படுத்தவார் அல்லவா? எந்த மாதிரி வேலையில் தேவன் தமது வல்லமையை வெளிப்படுத்துவார் என்றால், பின்வரும் நான்கு இலட்சணங்களையுடைய ஒரு வேலையில்தான்.

அத்தியாவசியமான முதல் தேவை என்னவெனில், தேவனுடைய நித்திய திட்டத்துக்கடுத்த பூரண வெளிப்பாட்டை, தெளிவான தரிசனமாய் இருதயத்தில் பெற்றிருத்தலேயாகும். இத்தகைய வெளிப்பாடில்லாமல் நாம் ஒன்றும் செய்கிறதில்லை. நான் ஒரு கட்டட வேலையில் ஈடுபட்டிருக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுவோம்.

நான் சாதாரணமாக ஒரு தொழிலாளியாக வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பினும், கட்டுவது ஒரு மாளிகையா, கடையா எதுவென்று நான் அறிந்திருக்க வேண்டுமல்வா? அது கட்டுவதற்கான திட்ட யோசனைகள் இவை இவை என்று நான் அறிந்திராவிட்டால் திறமையாக வேலைசெய்து முடிக்க என்னால் இயலாதே. இன்று சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவது ஒன்றே கர்த்தருடைய ஊழியம் என்று அநேக கிறிஸ்தவர்களால் கருதப்படுகிறது. ஆனால் சுவிசேஷ பிரபல்யம் சார்பற்ற ஒன்றாக இருக்கிறதற்கில்லை, அது தேவனுடைய முழு திட்டத்தின் ஒரு பாகமாக பிணைக்கப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், உண்மையில் அதுவே முடிவான இலக்காக அமையாமல், அந்த முடிவை ஏதுவாக்குகிறதாயிருக்கிறது. தேவகுமாரன் எல்லாவற்றிற்கும் மேலாக முதல்வராகத் திகழ்வதே அந்த முடிவு. தங்களுக்குள்ளே கிறிஸ்துவே முதன்மையாக விளங்குகிற அநேக குமாரர்கள் மந்தைக்குள் கொண்டுவருதலே சுவிசேஷ ஊழியமாம்.

பவுலின் நாட்களில் விசுவாசிகள் எல்லாரும் தேவனுடைய நித்திய திட்டத்தைக் குறித்த பங்குடனே, குறிப்பிட்ட ஒரு சம்பந்தம் கொண்டிருந்தனர் (விசேஷமாக 4:11-16 வரை பார்க்க.). இன்று நம்மிலும் அதுவே உண்மையாயிருக்கவேண்டும். தேவனுடைய கண்கள் வரப்போகிற அவருடைய இராஜ்யத்தை நோக்கினவண்ணமாக இருக்கின்றன. கிறிஸ்தவ சமயம் என்று விளங்கும் இன்றைய கிறிஸ்தவம் கிறிஸ்துவின் சர்வாதிகாரமுள்ள ஏகாதிபத்திய ஆளுகைக்கு வழிவிட்டுக்கொடுத்தாக வேண்டும். ஆயினும், சாலோமோனின் இராஜ்யப் பாரத்திற்கிருந்ததுபோல, இப்பொழுதும் ஆவியின் போராட்டமுள்ள தாவீதின் இராஜ்ய பாரத்திற்கு ஒத்த காலம் முன்னதாக ஒன்று உண்டு. இந்தப் போராட்டத்தில் தம்முடனேகூட உடன் ஊழியக்காரர்களாயிருக்கும்படியான ஆட்களைத் தேவன் இன்று தேடிக்கொண்டிருக்கிறார்.

நம் நோக்கத்தைத் தேவனுடைய நித்திய தீர்மானங்களோடு ஏக இசைவாயிரும்கும்படி விளங்கச்செய்வதே இப்பொழுதுள்ள காரியம். இத்தகைய ஒருமைப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாத எந்தக் கிறிஸ்தவ ஊழியமும் அற்பமானதும், சார்பற்றதும், ஒரு முடிவையும் விளைவிக்காததுமாய் இருக்கிறது. நம் இருதயத்தில் பரிசுத்தஆவியினாலே தமது சித்தத்தின் ஆலோசனையின் வெளிப்பாட்டைப் பெற நாம் தேவனைத் தேடவும் (1:19-12 பார்க்க) பின்பு, நாம் எடுத்துக்கொண்ட வேலையைக் குறித்து அதனோடு இது நேரிடையான சம்பந்தமுடையதாக இருக்கிறதா? என்று நம்மையே கேட்டுக்கொள்ளவும் வேண்டியவர்களாயிருக்கிறோம். இவைகளைச் சரியானபடி நாம் தீர்மானித்துக்கொண்டோமானால், அன்றாட வேலைகளில் எதிர்ப்படும் சிறிய காரியங்களுக்கடுத்த தேவவழிநடத்துதல் எளிதில் கிடைக்கும்.

இரண்டாவதாக, தேவதிட்டத்தில் பிரயோஜனமுள்ளதாய் விளங்கும் எல்லா ஊழியமும், தேவனால் உற்பத்தியாகவேண்டும். நாம் ஒரு திட்டத்தை வகுத்து, பின்பு தேவன் அதை ஆசிர்வதிக்கும்படி கேட்போமாகில், அதில் தேவனுடைய நேரடி நடத்துதலை எதிர்பார்ப்பது புத்தியீனம். அப்படிப்பட்டவைகளில் ஆசீர்வாதங்களை எதிர்ப்பினும், அவைகள் நிறைவானதாயிராமல் குறைவானவைகளாகவே இருக்கும். அவைகள் கிறிஸ்துவின் நாமத்தில் நடைபெறுகிறவர்களாயிராது. நம்முடைய நாமங்களே அவைகளில் விளங்கும். குமாரன்.... ஒன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார். எத்தனையோ முறை அப்போஸ்தல நடபடிகளில் பரிசுத்த ஆவியானவர் தடை செய்கிறதை நாம் படிக்கிறோம். 16ம் அதிகாரத்தில் பவுலும், அவர்களோடிருந்தவர்களும், ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டதாகப் பார்க்கிறோம். மறுபடியும் 7ம் வசனத்தில் ஆவியானவரோ, அவர்களைப் போகவொட்டாதிருந்தார் என்று படிக்கிறோம். ஆகவே, இது பரிசுத்த ஆவியானவருடைய நடபடிகளைப் பற்றிய புத்தகம்

என்றாலும், அவர் தடை செய்த நடவடிக்கைகளைக் குறித்தும் வாசிக்கிறோமே! நாம் உள்ளபடி செய்யும் வேலைகளே பெரிய காரியம் என்று அடிக்கடி எண்ணுகிறோம். ஒரு வேலையிலும் ஈடுபடாதிருந்து தேவனுக்கு அமைதியாக காத்திருக்கும் பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. தேவன் ஏவிவிடாதிருப்பாரானால், நாம் வேலையில் ஈடுபடத் துணியாது இருப்பது நல்லது. இதை நாம் கற்றறிந்து கொண்ட பிறகே, அவர் நம்மை, தம் காரியமாய்த் தாராளமாக உலகத்தில் அனுப்ப இயலும்.

ஆகையால், எனக்களிக்கப்பட்டிருக்கும் ஊழியத்தில், தேவனுடைய சித்தம் இன்னதென்று நான் குறிப்பாக அறிய வேண்டும். அந்த அறிவின்மூலமாய் மட்டும் வேலை துவக்கவேண்டும். ஆதியிலே தேவன்.... என்பதே உண்மையான எல்லா கிறிஸ்தவ ஊழியத்திற்கும், அடிப்படைத் தத்துவமாம்.

மூன்றாவதாக, எல்லா ஊழியமும், காரிய சித்தியடைய, அதன் தொடர்ச்சிக்காக, ஒவ்வொரு நிலையியும் தேவவல்லமையிலேயே சார்ந்திருக்கவேண்டும். வல்லமை என்றால் என்ன? நாம் இந்த வார்த்தைகளை அடிக்கடி தவறாக உபயோகிக்கிறோம். ஒருவரைக் குறித்து, அவர் வல்லமையான பேச்சாளர் என்று நாம் சொல்கிறோம். ஆயினும் அவர் எந்த வல்லமையை உபயோகிக்கிறார் என்று நாம் கேட்டுக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். அது, ஆவியின் வல்லமையா அல்லது மனுஷீக வல்லமையா? இக்காலங்களில் மனித வல்லமைக்குத் தேவனுடைய ஊழியங்களில் மிதமிஞ்சிய மேன்மை அளிக்கப்பட்டு வருகிறது. தேவன் ஆரம்பித்த ஊழியமாகவே இருப்பினும், நம் சுயபலத்தில் அதை நடத்தும்படி முயற்சிக்கிறவர்களாயிருப்போமானால், அதில் தேவன் தம்மை இணைத்துக்கொள்ளமாட்டாரென்பத நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

நான் மனித பலம் என்று சொல்லும்போது எதைக் குறிக்கிறது என்று கேட்கிறீர்களா? சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், தேவ உதவியில்லாமல் நாம் செய்யக்கூடியதெல்லாம் மனித பலமாகும். ஒரு சுவிசேஷக்கூட்டத்தையே, அல்லது ஒரு கிறிஸ்தவ வேலையையோ ஒழுங்குபடுத்தும்படி நாம் ஒருவனை ஏற்படுத்துகிறோம். ஏன்? அவன் இயற்கையாகவே அந்தக் காரியத்தில் தேறினவனாக இருப்பதினாலேயே அப்படிச் செய்கிறோம். அவ்வாறாகில் அவன் எவ்வளவு ஊக்கமாக ஜெபம் செய்வான்? தனக்கு இயற்கையாய் அமைந்துள்ள தாலந்துகளில் நம்பிக்கைகொள்ளும் பழக்கமுடையவனாயிருப்பானானால், தேவனை நோக்கி உதவி கேட்கும் அவசியத்தை அவன் உணராதிருப்பானே! நம்மெல்லாருக்கும் இருக்கிற பலவீனம் என்னவெனில், தேவனைச் சாராமல், நாமாகவே செய்து முடிக்கக்கூடிய காரியங்கள் மிகுந்திருப்பதே ஆகும். தேவனையே நாம் தொடர்ந்து சார்ந்திருந்து அவருடைய பிரசன்னத்தை

உணர்ந்தாலொழிய பேசத் துணியவும், செய்கையில் இறங்கவும் கூடாத ஒரு நிலைக்கு நாம் கொண்டுவரப்படவேண்டும்.

மோசேயைக் குறித்து, அவன் எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும், செய்கையிலும் வல்லவனானான் என்று ஸ்தேவான் கூறுகிறான். ஆயினும் தேவன் அவனைச் சந்தித்துப் பேசின பிறகு ஆண்டவரே, இதற்கு முன்னாவது தேவரீர் உமது அடியானோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல. நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்று அறிக்கையிட வேண்டியதாயிருந்தது. வாக்கில் சாதுரியான ஒரு பிரசங்கி நான் பேசி அறியேன் என்று சொல்லும்படியான நிலைக்கு வருவானேயாகில், அடிப்படையான பாடத்தைக் கற்றுத்தான் தேவனால், வல்லமையாய் உபயோகிக்கப்படக்கூடிய ஸ்திதிக்கு வந்திருக்கிறான் எனலாம். இந்த வெளிப்பாடு குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஆரம்பமாகி ஜீவகாலமெல்லாம்தொடர்ந்து நடந்தேறும் உன்னத அனுபவமாக இருக்கும். அடிப்படையாக நாம் நமது சுயபலத்தை நம்பாதபடிக்குத் தேவன் முதலாவது தமது திவ்விய கரம் நம்மேல் வைக்கிறார். அதன் பிறகு அந்த அனுபவம் பெருகி அதன் வியாபகம் நம் ஜீவியத்தில் வளர, வளர நம் சுயம் தலைகாட்டும் காரியங்களை எல்லாம் ஒவ்வொன்றாகச் சிலுவையினடியில் கொண்டுவரவேண்டும். இது கடினமானதும், வேதனையுள்ளதுமான ஒரு பாதையாக இருப்பினும், இதுவே ஜீவியத்திலும் ஊழியத்திலும் மிகுந்த கனிகொடுக்கக்கூடிய தேவனுடைய திட்டமான வழி.

இந்நாட்களில் தேவஊழிய முறைகள் அநேகமாக தேவனைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லாத வகையாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அப்படிப்பட்ட வேலைகளுக்கெல்லாம் என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்பதே ஆண்டவருடைய திட்டமான தீர்ப்பு. தேவனில்லாமல் மனிதனாகச் செய்யும் இப்படிப்பட்ட எல்லா வேலைகளும் மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளால் கட்டப்பட்டவை. இவை அக்கினியால் பரிசோதனைக்குட்படும்போது, ஒன்றுமில்லாதவை என்று நிரூபிக்கப்படும். ஏனெனில் தெய்வீக ஊழியம், தெய்வீக வல்லமையாலேயே செய்யமுடியும். அந்தத் தெய்வீக வல்லமை ஆண்டவராகிய இயேசுவிலன்றி வேறெங்கும் காணமுடியாது. சிலுவைக்குப் பின் வரும் உயிர்த்தெழுதலிலே, அவருக்குள் வழிவகை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது பேச அறியேன் என்று உள்ளத்தின் ஆழத்திலிருந்து மெய்யாய்க் கதறும்படியான நிலைக்கு நாம் வந்த பிறகே, தேவன் பேசுகிறதைக் கண்டுபிடிக்கிறோம். நாம் நம் கிரியைகளைவிட்டு ஓய்ந்து ஒரு முற்றுப்புள்ளியிடும்பொழுதே, கர்த்தர் தம்முடைய கிரியைகளைச் செய்ய ஆரம்பிக்கிறார். பின் ஒருநாளில் சோதிக்கும் அக்கினியும், இன்றைய சிலுவையின் அனுபவமும் ஒரே விளைவையே விளைவிக்கின்றன. இன்றைக்குச்

சிலுவைக்குமுன் நிற்கக்கூடாதது, அந்நாளின் அக்கினிச் சோதனைக்கு நில்லாதே. என் சுயபெலத்தில் செய்யப்படும் என் ஊழியமானது மரணத்திற்குள்ளாக்கப்படுமானால், கல்லறையிலிருந்து வெளிப்படக்கூடியது எம்மாத்திரம்? ஒன்றுமே இராது. கிறிஸ்துவுக்குள்ளாக முழுவதும் தேவனாலுண்டானவைகளேயல்லாமல், சிலுவையிலிருந்து மீளக்கூடியது ஒன்றும் இல்லை.

நாம் செய்துமுடிக்க இயலும் எந்தக் காரியத்தையும் செய்யும்படியாகத் தேவன் நம்மைக் கேட்கிறதில்லை. அவர் நம்மில் எதிர்பார்ப்பது, நாம் ஜீவிக்க இயலாத முறைகளில் ஜீவிப்பதும், நாம் செய்ய இயலாத காரியங்களைச் செய்வதும் ஆகும். ஆயினும் அவருடைய கிருபையால் அந்தப்படியே ஜீவிக்கிறோம். அந்தப்படியே செய்கிறோம். நாம் ஜீவிக்கும் ஜீவியம், தேவவல்லமையிலே ஜீவிக்கும் கிறிஸ்துவின் ஜீவியம். நாம் செய்யும் ஊழியம், நாம் கீழ்ப்படிகிற பரிசுத்த ஆவியானவரால் நம்மூலமாக நடந்தேறும் கிறிஸ்துவினுடைய கிரியைகளே. இப்படிப்பட்ட ஜீவியத்திற்கும் ஊழியத்திற்கும் தடையாக உள்ளது நான் என்பதே. (தன்னலமே) நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரே, என்னில் கிரியை நடப்பியும் என்று இருதய ஆழத்திலிருந்து எழும் ஜெபத்தை ஏறெடுப்போமாக.

கடைசியாகத் தேவன் தம்மையே ஒப்புவிக்கக்கூடியதான எல்லா ஊழியத்தின் எண்ணமும், கருத்தும் இலக்கும் கர்த்தருடைய மகிமையாகவே இருக்கவேண்டும். அதாவது இப்படிப்பட்ட ஊழியத்தின் விளைவாக நாம் முடிவில் ஒன்றையும் பெறுகிறதில்லை. நாம் இத்தகைய ஊழியத்தின்மூலமாய் எவ்வளவுக்கவ்வளவு குறைவாகச் சுயநல உபகாரங்களைப் பெற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் அது மெய்யான தேவமகிமையைப் பெற்றதாயிருக்கும் என்பதே தெய்வீக சட்டம். தெய்வீக ஊழியத்தில் மனிதன் கனத்தைப் பெறும்படியான இடம் ஒன்றுமேயில்லை. தேவனுக்குப் பிரீதியாக இருக்கும் எந்த ஊழியத்திலும் நிறைந்தோடும் மெய்யான சந்தோஷம் உண்டென்பது உண்மையே. தேவன் கிரியை செய்வதற்கே அத அதிகமாய் இடமளிக்கிறது. ஆயினும், மனிதனல்ல, தேவனே மகிமைப்படுகிறார் என்பதே அந்தச் சந்தோஷம் உண்டாவதின் காரணமாம். சகலமும் தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக (1:5,11,14) அமைந்துள்ளது.

நமக்கும் தேவனுக்கும் முன்பாக இந்தக் காரியங்களையெல்லாம் மெய்யாகச் சரிப்படுத்திக்கொண்டபிறகே, அவர் தம்மை நமக்கு ஒப்புக்கொடுப்பார். அச்சந்தர்ப்பங்களில் அவர் தம்மை தமக்கு ஒப்புக்கொடுத்தாக வேண்டுமென்று நாம் சொல்லவும் இடம் கொடுப்பார் என நினைக்கிறேன். சீனாவில் நாங்கள்

செய்த ஊழியங்களில் இதையே கற்றுக்கொண்டோம். இது தேவனால், அவருடைய சித்தத்தின்படி ஆனதோ இல்லையோ என்று சந்தேகிக்க ஏது உண்டான வேலைகள் சம்பந்தமாய் செய்த ஜெபங்களுக்கு, அவர், பதிலளிக்க முற்படவில்லை என்று கண்டோம். ஆனால், முழுவதும் அவராலானவைகளில், ஆச்சரியமான முறைகளில் அவா தம்மை கட்டுப்படுத்திக்கொள்ளுவார். அப்பொழுதுதான், அவருக்கு முற்றும் கீழ்ப்படிந்தவர்களாய் அவர் நாமத்தை உபயோகிக்க, பாதாளமும்கூட நம்முடைய அதிகாரத்திற்கு அடங்கி நடந்தாகவேண்டும். தேவன் ஒரு காரியத்தில் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்வாரானால், தாமே அதற்குக் கர்த்தர் என்றும், தாமே அதை நடப்பிக்கிறவர் என்றும் நிரூபணமாகும் பொருட்டாக, சர்வ வல்லமையுடன் எழுந்தருளுகிறார்.

முடிவாக, என்னுடைய அனுபவங்களில் ஒன்றை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்ளட்டும். நாங்கள் ஊழியத்தைத் தொடங்கின சில வருடங்களுக்குப்பின், கடுமையான சோதனைக் காலம் கடந்து செல்ல நேரிட்டது. அந்தநாள் மனமடிவின் நாள்களாகவும், நம்பிக்கையிழந்த நாட்களாயும் இருக்கக் கண்டோம். நாங்கள் எடுத்துக்கொண்ட உறுதியான நிலைமையினிமித்தமாகப் பலவிதமான அவமதிப்புக்கும் தூஷண பேச்சுக்கும் ஆளானோம். இதினிமித்தம் நாங்கள் விலக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டுக் கர்த்தருடைய மெய்யான பிள்ளைகளாலும் தள்ளிவிடப்பட்டோம். எங்களுக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட காரியங்களைக் குறித்து நாங்கள் எங்களை நல்மனச்சாட்சியுடனே ஆராய்ந்து பார்த்தோம். ஏனெனில் என்னைத்தான் தூஷிப்பதே அவனுக்கு வேலை என்று அசட்டையாகச் சொல்லித் தள்ளிவிட்டுவிடாமல் நமக்கு விரோதமாய்க் கூறப்பட்டவைகளை எடுத்துக்கொண்டு, நம்மை ஆராய்ந்து பார்ப்பது நன்மையை விளைவிக்கும் அல்லவா? ஆயினும், தேவன் எங்களுடனே இருக்கிறார் என்று சொல்லத்தக்க போதுமான காரணங்கள் இருக்கக்கண்டோம். ஏனெனில், விசேஷமாய் மிகுந்த கடினமான அந்த ஆண்டு கடந்துபோகும் முன்னே மெய்யாய் மனந்திரும்பின நூற்றுக்கணக்கான ஆத்துமாக்களை ஆண்டவர் எங்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்று எங்களால் நிச்சயமாகச்சொல்ல ஏது இருந்தது. ஆண்டின் முடிவிலோ சோதனையின் உச்சநிலையை அடைந்தோம் என்று சொல்லும் வண்ணமாகக் காரியங்கள் நடந்தேறின.

கடந்த சில வருடங்களாகச் புது வருட விடுமுறை நாட்களில் மாகாணம் முழுவதிலும் சிதறியிருக்கிற பற்பல விசுவாசிகளுக்காக ஆண்டுதோறும் பட்டணத்திலே கூட்டங்களை நடத்துவது எங்களுக்கு வழக்கமாக இருந்து வந்தது. அந்தக் கூட்டங்ளை ஒழுங்கு செய்பவர் இந்த வருடம் என்னைக் கூட்டங்களுக்கு வரவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். எங்களுக்கு இது ஒரு

பெரிய அதிர்ச்சியை உண்டுபண்ணியது. இது என்னையும் என் உடன் சகோதரர்களையும் கிறிஸ்துவுக்குள் நாங்கள் உட்கார்ந்திருக்கும் நிலையிலிருந்து புரட்டிப்போடவேண்டுமென்று சாத்தான் செய்த சூழ்ச்சி என்று நான் இப்பொழுது உணருகிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் நாங்கள் நடந்து கொள்ளவேண்டிய முறை என்ன என்பதே எங்களுக்கு முன்பாக இருந்த காரியம். புது வருடத்திற்கென்று விடும் விடுமுறை பதினைந்து நாட்கள் நீடித்திருக்கும். இவை கூட்டங்களுக்கு மிகவும் வசதியான நாட்களாய் அமைந்திருக்கிறது மட்டுமல்லாமல், சுவிசேஷ பிரபல்யத்திற்கு ஏற்ற காலமாகவும் உள்ளது. கர்த்தருடைய சித்தத்திற்குக் காத்திருந்த எங்களுக்கு இந்த நாட்களைச் சுவிசேஷ பிரசங்கத்திற்குச் செலவிடுவதே அவருடைய விருப்பம் என்று தெளிவாகப்பட்டதால் ஐந்து சகோதரர்களைக் கூட்டிக்கொண்டு கடற்கரையோரத்திலுள்ள ஒரு தீவில் சுவிசேஷ ஊழியத்தில் அந்த நாட்களைச் செலவிடும்படி நான் யோசித்தேன். கடைசி நேரத்தில் வாலிபனான மற்றொரு சகோதரனும் எங்களுடன் சேர்ந்துகொண்டான். அவனை சகோதரன் வியு என்று அழைப்போம். பதினாறு வயதுடையவனான அவன் பள்ளிக்கூடத்திலிருந்து தள்ளப்பட்டவன். ஆனால் இரட்சிக்கப்பட்டுச் சில நாட்களே ஆன அவனிடத்தில் ஒரு பெரிதான மாறுதல் காணப்பட்டது. அவன் எங்களுடனேகூட வருவதற்கு மிகுந்த வாஞ்சையுடையவனாக இருந்ததினால், சிறிது நேரம் யோசித்து பிறகு, அவனையும் அழைத்துப்போகச் சம்மதித்தேன். இப்படி எல்லாருமாக நாங்கள் ஏழுபேர் புறப்பட்டோம்.

அந்தத் தீவு பெரிதாகவே இருந்தது. அங்கேயிருந்த கிராமத்தில் சுமார் ஆறாயிரம் வீடுகள் இருக்கும். என்னுடனே பள்ளியில் படித்த ஒருவர் அந்தக் கிராமப் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்தார். நாங்கள் அங்கே செலவிடப்போகும் அந்தப் பதினைந்து நாட்களும் தங்குவதற்கென்று சிறிய ஓர் இடம் கொடுக்கும்படி முன்னதாகவே அவருக்கு எழுதியிருந்தேன். நாங்கள் அந்த ஊர் வந்து சேர்ந்தபொழுது நன்றாக இருட்டி விட்டது. சுவிசேஷ பிரபல்யத்திற்காக வந்திருக்கிறோம் என்பதை அவர் அறிந்தபொழுது, எங்களுக்கு இடம் கொடுக்க மறுத்துவிட்டார். ஆகையால், வேறு இடம் பார்க்கும் நோக்கத்துடன் கிராமத்தில் சுற்றிக்கொண்டேயிருந்தோம். கடைசியான ஒரு சீனர் எங்கள்மேல் இரக்கங்கொண்டு, தன் வீட்டின் மாடியிலே இடங்கொடுத்து வைக்கோல், பலகை இவைகளில் நாங்கள் சௌகரியமாகப் படுத்துத் தங்கும்படி செய்தார்.

சில தினங்களுக்குள்ளாக, முதலில் அந்தச் சீனரே மனந்திரும்பினார். ஆனாலும் நாங்கள் ஒழுக்கமாய் ஊக்கத்துடனே பாடுபட்டு உழைத்தும், அவ்வூர் மக்கள் மிக மரியாதையுள்ளவர்களாய் இருக்க நாங்கள் கண்டும், அத்தீவில் எங்கள்

ஊழியத்தின் பலன் மிகவும் குறைவானதாகவே இருந்தது. இதன் காரணம் என்னவாயிருக்கும் என்று திகைக்கலானோம்.

ஜனவரி 9ம் தேதியன்று பிரசங்கிப்பதற்காக நாங்கள் வெளியே போயிருந்தோம். சகோதரன் வியுவும் மற்றும் சிலரும் கிராமத்தின் ஒரு பாகத்தில் இருந்தார்கள். பிரசங்கத்தின் நடுவே அவன் திடீரென்று சூழ்ந்திருந்த ஜனங்களைப் பார்த்து, ஏன் உங்களில் ஒருவனும் விசுவாசியாமலிருக்கிறீர்கள்? என்று கேட்டான். உடனே கூட்டத்திலிருந்த ஒருவன் எங்களுக்கு மகா இராஜா என்று அர்த்தங்கொள்ளும் டா வங் என்ற ஒரே தேவன் உண்டு. இதுவரை அவர் ஒருபோதும் எங்களை ஏமாற்றினதேயில்லை. அவர் பலமுள்ள தேவன் என்றான். நீங்கள் அவரை நம்பலாம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்று வியு மறுமொழியாகக் கேட்டான்.

நாங்கள் கடந்த 286 வருடங்களாக ஜனவரி மாதத்திலே அவருடைய ஊர்வல திருவிழாவைக் கொண்டாடி வருகிறோம். அதற்கான நாள் சகுனம் பார்த்து முன்னதாகவே குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மாறுதலில்லாமல் அந்த நாள் மப்பும் மந்தாரமும் அற்று பிரகாசமான நாளாக இருந்து வருகிறது என்று பதில் வந்தது.

இந்த ஆண்டு ஊர்வலத்திற்கு குறிக்கப்பட்டுள்ள நாள் எது?
ஜனவரி 11ம் தேதி காலை 8 மணிக்கு அது குறிக்கப்பட்டிருக்கிறது.
அப்படியானால் வியு உக்கிரத்துடன் 11ம் தேதி கண்டிப்பாக மழை பெய்யும் என்றான்.
உடனடியாக கூட்டத்திலிருந்து கூக்குரல்கள் எழும்பின இது எங்களுக்குப் போதும்! இனி உங்கள் பிரசங்கங்களை நாங்கள் கேட்கவேண்டியதில்லை. 11ம் தேதி மழை பெய்யுமானால் உங்கள் தேவனே தேவன் என்றார்கள்.

இது நடக்கும்போது நான் கிராமத்தின் மற்றொரு பாகத்தில் இருந்தேன். இந்தச் செத்தியைக் கேட்டவுடனே, இது மிகவும் ஆபத்தான ஒரு நிலைமை என்று உணர்ந்தேன். இதற்குள்ளாக, இச்செய்தி காட்டுத் தீயைப்போலப் பரவி இருபது ஆயிரம் மக்களும் இதைப் பற்றித் தெரிந்துகொண்டிருந்தனர். இப்பொழுது நாங்கள் செய்யக்கூடியது என்ன? உடனடியாகப் பிரசங்கங்களை நிறுத்தி ஜெபத்திற்கென்று எங்களை ஒப்புக்கொடுத்தோம். எங்களுக்கு மீறின காரியத்தில் இறங்கியிருப்போமானால் மன்னிக்கும்படியாக ஆண்டவரைக் கேட்டோம். மெய்யாகவே நாங்கள் ஊக்கமுடையவர்களாக இருந்தோம் என்று நான் சொல்ல வேண்டியதில்லை. நாங்கள் செய்த காரியம் என்ன? ஒரு பெரிய தப்பிதத்தைச் செய்துவிட்டோமா அல்லது அதிசயம் நடப்பிக்கும்படி தேவனைக் கேட்டகத் துணிவோமா?

நம் ஜெபத்திற்கும் தேவனிடமிருந்த எவ்வளவாக ஆவலுடன் பதில் பார்க்கிறோமோ அவ்வளவாக அவருக்கு முன் தெளிந்த மனச்சாட்சியுடையவர்களாக இருக்க விரும்புவோம். அவருக்கும் நமக்கும் உள்ள ஐக்கியத்தில் எந்தவிதமான சந்தேகமோ தடையான காரியமோ எதுவும் இல்லாதிருக்கவேண்டும். நாங்கள் தப்பிதமான காரியம் செய்திருப்போமானால் எங்கள் நிலையை இழந்து போவதைக் குறித்து வருத்தப்பட மாட்டோம். தேவனை நாம் பலவந்தம்பண்ண முடியாதே. ஆனால் சிந்திதுப் பார்க்கையில் இது இந்தத் தீவின் சவிசேஷ சாட்சிக்கு ஒரு முற்றுப்புள்ளியாகவல்லவோ முடியும். டாவங் அல்லவா சதா ஆட்சி செயகிறவனாயிருப்பான்? இந்நிலையில் நாம் விட்டுவிடலாமா?

இப்படி நாங்கள் சிந்திக்கும்வரை மழைக்காக ஜெபிக்கப் பயந்துகொண்டிருந்தோம். பின்பு மின்னல்போல எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே? என்ற வசனம் எனக்கு வந்தது. மிகுந்த தெளிவாக வல்லமையுடனே அது எனக்கு வந்தபடியால், அது தேவனிடத்திலிருந்தே வந்ததென்று நிச்சயித்தேன். நம்பிக்கையுடனே, சகோதரர்களைப் பார்த்து எனக்கு பதில் கிடைத்துவிட்டது. ஆண்டவர் 11ம் தேதி மழையை அனுப்புவார் என்று அறிவித்தேன். எல்லாருமாகச் சேர்ந்து ஆண்டவரைத் துதித்தோம். பின், கிராமவாசிகளுக்கு அறிவிக்கும்படியாக நாங்கள் ஏழு பேரும் ஸ்தோத்திரம் நிறைந்தவர்களாகப் புறப்பட்டோம். சாத்தானுடைய சவாலை ஆண்டவருடைய நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளவும், அப்படி ஏற்றுக்கொண்டதை எல்லாருக்கும் தெரிவிக்கவும், அப்படி ஏற்றுக்கொண்டதை எல்லாருக்கும் தெரிவிக்கவும் நமக்கு முடிந்ததே.

அன்று மாலை எங்களுக்கு இடம் கொடுத்த சீனர் இரண்டு குறிப்பான காரியங்களைச் சொன்னார். ஒன்று, சந்தேகமில்லாமல் டா - வங் வல்லமையுள்ள விக்கிரகம். சாத்தான் அந்தச் சொரூபத்துடனேகூட இருக்கிறான். அதன்மேல் கொண்டுள்ள அவர்களுடைய நம்பிக்கைக்கு ஆதாரமில்லாமலில்லை. அடுத்தது, மனிதர் பிரகாரமாகப் பேசுவோமானால், இந்த முழு கிராமமும் மீன்பிடிப்பவர்கள் வசிக்கும் இடம். இரண்டு மூன்று மாதகாலம் தொடர்ந்து கடலில் செலவிடுபவர்கள். மறுபடியும் 15ம் தேதி, அவர்கள் கடலுக்குத் திரும்புவார்கள். தங்கள் நீண்ட அனுபவத்தின் பயனாய் இரண்டு மூன்று நாட்களுக்குமுன் மழை பெய்யாது என்று பிறரைக்காட்டிலும் அவர்கள் நிச்சயமாய் அறிவிக்கிறார்கள்.

இது எங்களைச் சோர்ந்துபோகும்படி செய்தது. நாங்கள் மாலை ஜெபத்திற்குக் கூட்டிவந்தபொழுது திரும்பவும் மழைபெய்ய வேண்டுமென்று உடனடியாக

பெய்ய வேண்டுமென்று ஜெபித்தோம். அப்பொழுதும் எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே? என்பதே மறுபடியும் ஆண்டவரிடமிருந்துவந்த திட்டமும் தெளிவுமான வார்த்தைகள். இந்த யுத்தத்திலே நேரிடையாக நாமே போராடப்போகிறோமா அல்லது கிறிஸ்து கண்ட வெற்றியில் நாம் அமர்ந்து நிலைத்திருக்கப்போகிறோமா? இந்த வார்த்தைகளைச் சொன்னபோது, எலிசா செய்ததென்ன? பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தன் ஆண்டவனாகிய எலியா நடத்தின அதிசயம் தன்னுடைய அனுபவத்திலும் நடைபெறவேண்டும் என்று சார்ந்திருந்தான். புதிய ஏற்பாட்டு முறைப்படி சொல்லுவோமானால், முன்பே நடந்து முடிவுபெற்ற கிரியையில் விசுவாசமுடையவனாய், அதில் நிலைத்திருந்தான்.

மறுபடியுமாக எங்கள் பாவங்களை அறிக்கையிட்டோம். ஆண்டவரே, 11ம் தேதி காலை வரை எங்களுக்கு மழைவேண்டாம் என்று கூறினோம். அடுத்த நாள் காலையில் (10ம் தேதி) அருகாமையிலிருந்த வேறொரு தீவுக்கு ஒருநாள் ஊழியத்திற்கென்று சென்றோம். ஆண்டவருடைய மிகுந்த கிருபையால், அந்த நாளின் ஊழியத்தினால் மூன்று குடும்பங்கள் அவரண்டடை திரும்பின. தங்களுடைய விக்கிரகங்களையெல்லாம் எரித்துப் பகிரங்கமாக ஆண்டவரை அறிக்கையிட்டனர். களைப்புற்றவர்களாக நேரம் கழித்துத் திரும்பினும் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுள்ளவர்களாய் இருந்தோம்.

மறுநாள் காலை 11ம் தேதி நான் விழித்தெழுந்தேன். காலை சூரிய ஒளி ஜன்னல் வழியாக நாங்கள் தங்கியிருந்த மேல் அறையில் வீசிக்கொண்டிருந்தது. இது மழையின் அறிகுறியல்லவே என்று நினைக்கலானேன். மணி ஏழுக்கு மேலாகியிருந்தது. நான் எழுந்து முழங்காற்படியிட்டு ஆண்டவரே, மழையை அனுப்புவீராக என்று ஜெபித்தேன். ஆனாலும் எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே? என்ற கண்டிப்பான வார்த்தைகளே மறுபடியும் என் காதுகளில் தொனித்தன. தேவனுக்கு முன் தாழ்த்தப்பட்டவனாக தேவபிரசன்னத்தில் மாடியைவிட்டு இறங்கினேன். எட்டுப்பேரும் அந்த சீனர் உட்பட உட்கார்ந்தபோது நாங்கள் மௌனமாய் இருந்தோம். வானத்திலெங்கும் ஒரு மேகமும் இல்லை. ஆனால் தேவன் நம்மை இந்தக் காரியத்தில் கட்டுப்படுத்தியிருக்கிறார் என்று மட்டும் அறிவோம். எங்களுக்கு முன் வைக்கப்பட்ட ஆகாரத்திற்காக ஸ்தோத்திரம் செய்யக் குனியும்பொழுது குறித்தநேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன். இப்பொழுது மழை பெய்யவேண்டியது, இதை ஆண்டவருடைய நினைவுக்குக் கொண்டுவரலாம் என்றேன். மௌனமாக அப்படியே செய்தோம். இந்தமுறை எங்களுக்கு வந்த பதிலில் கண்டிப்பின் அறிகுறி சிறிதும் கிடையாது.

எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே? நாங்கள் ஆமென் என்று சொல்லி முடிக்கு முன்பாகவே மழைத்தூரல் ஓடுகளின்மேல் விழும் சத்தம் கேட்டது. எங்களுக்குப் பரிமாறப்பட்ட முதல் கோப்பை சாதத்தை சாப்பிட்டுமுடிக்கும்வரை தொடர்ந்து தூறிக்கொண்டேயிருந்தது. அடுத்தபடியாக, இரண்டாவது கோப்பை பரிமாறினபோது, மீண்டும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம் என்றேன். இப்பொழுது கனத்தமழையை அனுப்பும்படியாக ஆண்டவரைக் கேட்டுக்கொண்டோம். இரண்டாவதாக, எங்களுக்குப் பரிமாறப்பட்டதைச் சாப்பிட ஆரம்பிக்கையில் மழை கனத்துக் கொட்டியது. சாப்பிட்டு முடிக்கும்போதோ தெருக்களில் தண்ணீர் பெருகி, வெள்ளம் பெருக்கெடுத்துக்கொண்டிருந்தது. வாசல்படிகளில் மூன்றுபடிகள் நீரில் மூழ்கியிருந்தன. சீக்கிரத்தில் கிராமத்தில் நடந்த சம்பவங்களைக் குறித்து நாங்கள் கேள்விப்பட்டோம். சில துளிகள் விழுவதற்குள்ளாகவே வாலிப மக்களில் சிலர் அவரே தேவன், இனி டா-வங் தேவன் அல்ல. மழையினிமித்தம் டா-வங் வெளியேற முடியாதே என்று வெளிப்படையாகச் சொல்ல ஆரம்பித்துவிட்டனர். வேறு சிலர் அப்படியல்ல, அவர் தேவனாயிருக்கிறதிற்கில்லை என்றார்கள். ஆனால், மழையோ கனத்தது. பத்து அல்லது பன்னிரண்டு ஜெகதூரம் வருவதற்குள்ளாக வாகனத்தைச் சுமந்துகொண்டு வந்த மூன்றுபேர் வழுக்கி விழுந்தனர். வாகனம் கீழே விழுந்தது. வாகனத்துடன் டா-வங் சொரூபமும்கூட விழுந்தது. அதன் இடது கையும் கன்னமும் உடைந்து போயிற்று. ஆனாலும், அவர்கள் உறுதியுடையவர்களாக உடைந்தவைகளை அவசரமாகச் சரிசெய்து விக்கிரகத்தை வாகனத்தில் மறுபடியும் ஏற்றினர். தட்டுத்தடுமாறினவனாக இழுத்துக்கொண்டும், தூக்கிக்கொண்டும் பாதி தூரம் வந்தார்கள். ஆனால் திரண்ட வெள்ளம் அவர்களைத் தடுத்துத் தோல்வியுறும்படி செய்தது. கிராம மூப்பர்களில் சிலர் 60 முதல் 80 வயதுள்ள வயோதிபர்கள் தாங்கள் டா-வங்கின்மேல் கொண்ட நம்பிக்கையால் குடையில்லாமல் புறப்பட்டுத் தங்கள் தலையை மூடாத நிலையில் இருந்து மிகவும் நனைந்துகொண்டிருந்தார்கள். இன்னது செய்வதென்று அறியாது திகைத்தனர். ஊர்வலம் நிறுத்தப்பட்டு விக்கிரகம் ஒரு வீட்டிற்குள் கொண்டுபோகப்பட்டது. மறுபடியும் சகுனம் பார்த்தனர். இன்று தப்பான நாள் என்று முடிவு செய்தனர். திருவிழா 14ம் தேதி என்றும், மாலை 6 மணிக்கு ஊாவலம் என்றும் அறிவித்தார்கள்.

இதைக் கேட்டவுடனே, ஆண்டவர் 14ம் தேதியிலும் மழையை அனுப்புவார் என்ற நிச்சயம் எங்கள் இருதயங்களில் உண்டாயிற்று. ஜெபத்திற்காகக் கூடினோம். ஆண்டவரே, 14ம் தேதி மாலை 6 மணிக்கு மழையை அனுப்பும். இடையிலிருக்கும் நான்கு நாட்களும் மழையில்லாமல் இருக்கட்டும் என்று ஜெபித்தோம். அன்று பிற்பகல் மேகங்கள் அகன்று வானம் தெளிவாயிற்று. எல்லாரும் சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்டனர். இந்த மூன்று நாட்களில் கிராமத்திலும் தீவிலுமிருந்து ஆண்டவர் முப்பதுக்கு மேலான பேர்களை

எல்லாரும் மெய்யாய் மனந்திரும்பியவர்களை இரட்சித்தார். 14ம் தேதி வந்தது. மீண்டும் துவக்கத்திலே மேகங்களில்லை, ஆசீர்வாதமான கூட்டங்களை நடத்தினோம். மாலை நேரம் நெருங்கியபோது நாங்கள் எல்லாருமாகக் கூடினோம். குறிப்பிட்ட நேரம் சமீபித்து வந்தவுடனே மறுபடியும் காரியங்களைக் கர்த்தருடைய சந்நிதானத்துக்கு முன் கொண்டுவந்தோம். ஒரு நிமிடமும் பிந்தாமல், முன்போலவே கனத்த மழையும், வெள்ளப் பெருக்குமாகத் தேவ பதிலைப் பெற்றோம்.

அடுத்த நாள் நாங்கள் திரும்பவேண்டிய நாள். இதுவரை நாங்கள் அந்தத் தீவுக்குத் திரும்பிப்போகவேயில்லை. வேறு சில ஊழியர் அந்த தீவுகளில் ஊழியம் செய்யும்படி எங்களிடம் அனுமதி கேட்டார்கள். எந்தப் பிராந்தியமும், பகுதியும் ஒருவருடைய ஆதிக்கத்திற்கு உரிமையானவை அல்லவே. எங்களுக்கோவெனில், அந்த விக்கிரகத்தின்மூலம் சாத்தான் கொண்டிருந்த வல்லமை முறிக்கப்பட்டதென்பதே முக்கிய காரியம். டா-வங் மகா இராஜா, சக்தி வாய்ந்த தெய்வம் அல்ல. இனி அத்தீவில் ஆத்துமாக்களின் இரட்சிப்புத் தொடரும். சாத்தான் தோற்கடிக்கப்பட்டான் என்ற இந்த மாற்றக்கூடாத சத்தியமே இனிவரும் இரட்சிப்பின் கிரியைகளுக்கெல்லாம் ஆதாரம்.

இந்தச் சம்பவம் எங்கள் எல்லாருடைய உள்ளத்திலும் மிக ஆழமாகப் பதிந்தது. தேவன் இந்தக் காரியத்தில் தம்மையே கட்டுப்படுத்தியிருந்தார். தேவனுடைய பரிபூரண சித்தத்திற்குள் அமைவது என்னவென்று நாங்கள் செலவிட்ட அந்த சில நாட்களில் திட்டமாக அறிந்தோம். தேவனுடைய பரிபூரண சித்தத்திற்குள்ளிருப்பது என்பது இனி எங்களுக்கு ஒரு புதுமையான காரியமோ, அல்லது விளங்காத ஒரு காரியமோ அல்ல, அது நாங்கள் அனுபவித்தவைகளையே விவரிக்கக்கூடியது. தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியம் (1:10, 3:11) அதன் ஒரு சிறு பகுதியை நாங்கள் ஒருவாறு காணுமாறு எங்களுக்குத் தேவன் அனுக்கிரகம் பண்ணினார். எங்கள் ஜீவிய காலங்களிலெல்லாம் இந்த நம்பிக்கையுடனே முன்னேறிச் செல்லலாம்.

பல வருடங்கள் கழித்து, சகோதரன் வியுவை நான் சந்தித்தேன். இடையில் எனக்கும், அவனுக்கும் தொடர்பு இல்லாமற்போயிற்று. அந்த நாட்களில் அவன் ஒரு விமான மாலுமியாகியிருந்தான். இன்றும் ஆண்டவரைத் தொடர்ந்து செல்லுகிறாயா? என்று நான் அவனைக் கேட்டபொழுது ஐயா நாம் கடந்து சென்ற அந்த அனுபவங்களுக்குப் பிறகு என்னால் அவரைப் புறக்கணிக்க இயலுமா? என்று உணர்ச்சி மேலிடக் கூறினான்.

நில் என்ற பதத்தின் அர்த்தம் இன்னதென்று இப்பொழுது நீங்கள் அறிகிறீர்களல்லவா? அது நாம் வெற்றி கொள்ளும்படி பிரயாசப்படுவதில்லை.

ஆண்டவராகிய இயேசு நமக்காக வென்ற வெற்றியின்மேல் நிற்பதும் அந்த வெற்றியினின்று விலக மறுத்து உறுதிகொண்டு நிற்பதுமே நில் என்பதாம். வெற்றி சிறந்த ஆண்டவராயிருக்கிற கிறிஸ்துவைப் பார்க்கும்படியாக நம் கண்கள் மெய்யாகவே திறக்கப்படுமானால், நம்முடைய துதி தடையில்லாமல் மேலெழும், நம்முடைய இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி, அவருடைய நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் தேவனை ஸ்தோத்தரிப்போம் (5:19-20). முயற்சி பிரயாசம், இவைகளின் விளைவாக வரும் துதி பாராமாயும் இனிமையற்றதாயும் இருக்கும். ஆனால் ஆண்டவரைச் சார்ந்திருப்பதின் விளைவாக இருதயத்தில் உண்டாகும் சமாதானத்தின் காரணமாய், இயல்லபாக ஊற்றெடுக்கும் துதியோ எப்பொழுதும் தூய்மையும் இன்பமும் கலந்ததாயிருக்கும்.

கிறிஸ்தவ ஜீவியம், கிறஸ்துவுடன் உடகார்ந்து, அவருடன் நடந்து, அவரில் நிற்பதாம். நம் ஆத்மீக ஜீவியத்தை ஆண்டவராகிய இயேசு செய்து முடித்த கிரியையைச் சார்வதினாலேயே துவங்குகிறோம். அதனாலுண்டாகும் இளைப்பாறுதலே இந்த உலகத்தில் தொடர்ந்து தட்டுப்படாமல், நாம் நடப்பதற்கு வேண்டிய பலத்திற்கான ஊற்றாக விளங்குகிறது. பொல்லாத ஆவிகளின் சேனைகளுடன் நமக்குள்ள கடினமான போராட்டத்தின் முடிவிலோ கிறிஸ்துவுடனேகூட நாம் நிற்கிறவர்களாகி, இறுதியில், முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்.

அவருக்கு.... சதா காலங்களிலும் மகிமையுண்டாவதாக (3:21).

***தொகுப்பு: சகோ. ஆ. திருமுருகன்***
***atmurugan@gmail.com***